

# ராஜீவ் காந்தி படுகொலை

## வெளிவராத மர்மங்கள்



திருச்சி வேலுசாமி

FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



# ராஜீவ் காந்தி படுகொலை

## வெளிவராத மர்மங்கள்

இந்நூல் "தமிழம்" இணைய தளத்தில்
வெளியிட நான் இசைவளிக்கிறேன்.
அன்புடன்
திருச்சி வேலுசாமி
7-4-10

● திருச்சி வேலுசாமி

1375 / 2010
http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

**அன்னைத் தமிழ் படைப்பகம்**
EE4, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,
சாலை ரோடு, உறையூர், திருச்சி - 620003
தொலைபேசி : 0431-2766939

FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

**ராஜீவ் காந்தி படுகொலை**
**வெளிவராத மர்மங்கள்**

**திருச்சி வேலுசாமி**

முதற் பதிப்பு : மே 2009

வெளியீடு :
அன்னைத் தமிழ் படைப்பகம்
EE4, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,
சாலை ரோடு, உறையூர், திருச்சி 620 003
தொலைபேசி : 04312766939

© திருச்சி வேலுசாமி

அச்சாக்கம் : பிரிண்டெக் — , சென்னை-600 005.

விலை
இந்தியா ரூ. 50
அயல்நாடு 20 யூரோ

**Rajiv Gandhi Padukolai**
**Velivaratha Marmangal**

**Trichy Velusamy**

First Edition : May 2009

Published by :
**Annai Tamil Padaippagam**
EE4, Housing Board Quarters,
Saalai Road, Woriur, Trichy - 620 003.

© Trichy Velusamy

Printed by : Printek — Chennai-600 005.

Price :
India Rs. **50/-**
Abroad **20/-** Euro

FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

# அணிந்துரை

1967ஆம் ஆண்டில் தமிழகத்தில் காங்கிரசுக் கட்சி அடைந்த தோல்விக்குப் பிறகு பெருந்தலைவர் காமராசர் அணியில் திரளான மாணவர்களைக் கொண்டுவந்து சேர்த்தவர்களில் திருச்சி வேலுச்சாமியும் ஒருவர் ஆவார். அந்த நாளில் இருந்து அவரை நான் நன்கு அறிவேன். காமராசர் பாதையில் இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து நடந்து வருபவர்.

ராஜிவ்காந்தி கொலையில் புதைந்திருக்கும் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கத் தன்னந்தனியாக யாருக்கும் அஞ்சாமல் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

நீதி, நேர்மை, உண்மை ஆகியவற்றை முற்றிலும் மறைத்து ஒரு கபட நாடகமாக ராஜிவ் கொலை வழக்கு நடத்தப்பட்டது. புலன் விசாரணை தொடங்கி, வழக்கு நடத்தப்பட்ட விதம், தீர்ப்பு அளிக்கப்பட்டது வரை ஏராளமான உண்மைகள் ஆழக்குழித்தோண்டி புதைக்கப்பட்டுவிட்டன.

தேசத் தந்தை காந்தியடிகளின் கொலை வழக்கு விசாரணை முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் கொலை வழக்கு விசாரணை ஆகியவை பகிரங்கமாக நடத்தப்பட்டன. அன்றாடம் வழக்குப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளின் வெளிவந்தன. ஆனால் ராஜிவ் காந்தியின் கொலை வழக்கு விசாரணை மட்டும் இரகசியமாக நடத்தப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வழக்காட முன்வந்த வழக்கறிஞர்கள் மிரட்டப்பட்டனர். ஐந்தாண்டு காலம் விசாரணை நடைபெற்ற பிறகு நீதிபதி மாற்றப்பட்டார். பதவி ஏற்ற புதிய நீதிபதி சில மாதங்களிலேயே ஐந்தாண்டுகால விசாரணை பற்றிய ஆவணங்களையெல்லாம் படித்தறிந்து 26 பேருக்கும் தூக்குதண்டனை விதித்த அதிசயமும் நடந்தது.

ராஜிவ்காந்திக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா என்பதை ஆராய்வதற்காக நீதிபதி ஜே.எஸ்.வர்மா ஆணையம் அமைக்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தார். ஆனால் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள மத்திய அரசு மறுத்துவிட்டது.

ராஜிவ் படுகொலை செய்யப்பட்டதற்கான பின்னணி, அதற்கான காரணங்கள் சம்பந்தப்பட்டுள்ள நபர்கள், நிறுவனங்கள், அடங்கியிருந்த

சதிகள் பற்றி விசாரிப்பதற்காக நீதிபதி ஜெயின் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது ஆறாண்டு கால விசாரணைக்கு பிறகு ஜெயின் ஆணையம் அளித்த அறிக்கையில் ராஜிவ் கொலை வழக்கில் உண்மைக் குற்றவாளிகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டது.

எனவே மத்திய அரசு உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறிய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு பத்தாண்டுகளுக்கு மேலாகியும் இன்னமும் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கிறது. விசாரணை முடிந்தபாடில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைத் தவிர மேலும் பல புதிர்களை தனது நூலில் திருச்சி வேலுச்சாமி கூறி அவற்றை அவிழ்ப்பதற்கான வழிமுறைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசியலில் ராஜிவ் கொலையை இடைவிடாமல் குறிப்பிட்டுப் பேசி உண்மைகளை மறைக்க முயற்சிசெய்பவர்கள் இந்த நூலை அவசியம் படிக்க வேண்டும். படித்த பிறகாவது தெளிவு பெறுவார்கள் என நம்புகிறேன்.

தன்னந்தனியே நின்று ஒரு மாபெரும் மரும முடிச்சை அவிழ்க்க முயற்சி செய்யும் தம்பி வேலுச்சாமி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

அன்புள்ள

**பழ.நெடுமாறன்**

ஒருங்கிணைப்பாளர்

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு

FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

# என்னுரை

**வா**சக நெஞ்சங்களே வணக்கம்!

ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த பண்பாட்டை, கலாச்சாரத்தை பேணிக்காப்பதின் வாயிலாக உலக மக்களின் பார்வையில் மேலோங்கி நிற்கின்ற இனம் நம் தமிழ் இனம். யாதும் ஊரே! யாவரும் கேளீர்!! என்ற கணியன் பூங்குன்றனும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவனும், நமது பாட்டன்கள். "வாடிய பயிரைக் கண்டு வாடும் நெஞ்சம் வேண்டும்" என்ற வள்ளலாரும், "காக்கை குருவி எங்கள் சாதி. காடும் மலையும் எங்கள் கூட்டம்" என்ற பாரதியும் நம் உறவுகள். முல்லைக்கு தன் தேரையே தந்த பாரியும், மயிலுக்கு பட்டாடையைப் போர்த்திய பாகனும், பசுங்கன்றுக்காக தன் மகனையே தேர்க்காலில் கொன்ற மனுநீதிச் சோழனும் நம் சொந்தங்கள். இப்படிப்பட்ட பெருமைக்குரிய நம் தமிழ் இனத்தின் மீது தீராப்பழியை, களங்கத்தை, கறையை உருவாக்க நினைத்த தமிழின பகைவர்களால் சாமர்த்தியமாக சுமத்தப்பட்டதுதான்? முன்னாள் பிரதமர் திருமிகு ராஜீவ்காந்தியின் கொலைச்சதி வழக்கு. தமிழ் இனத்தின் மீது பழி சுமத்தியது மட்டுமல்லாமல், ஒன்பது கோடி தமிழர்களின் அடையாளமாக ஒரு தனி நாட்டை உருவாக்க நடைபெற்று வருகின்ற ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தவும் ராஜீவ் கொலை வழக்கை பயன்படுத்திக் கொண்டது அந்த சூது மனம் படைத்த குள்ளநரிக் கூட்டம்!

தமிழினத்தின் மீது சுமத்தப்பட்ட களங்கத்தைப் போக்க, அந்த கறையை நீக்க கடந்த பதினைந்து ஆண்டுகளாக போராடிக்கொண்டிருக்கிறேன். நல்லவர்களின் துணையோடு. இந்த நேரத்தில் குமுதம் இணையதளத்திற்காக எடுக்கப்பட்ட பேட்டி உலகம் முழுவதும் உள்ள தமிழர் நெஞ்சங்களுக்கு ஒரு புது நம்பிக்கையை உருவாக்கியது. இந்தப் பேட்டியே புத்தக வடிவில் வந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று நச்சரிக்கத் தொடங்கினார் பேட்டி எடுத்த தம்பி பா. ஏகலைவன். உலகத் தமிழர்கள் அனுப்பிய கடிதமும் அதையே வலியுறுத்தியது. அதன் விளைவே உங்கள் கரங்களில் தவழும் இந்த சின்ன புத்தகம். புத்தகம் சிறியதாக இருந்தாலும் சதிகாரர்களின் கொட்டத்தை அடக்க இந்த நூல் ஒரு போர்க்கருவியாக பயன்படும்

என்று நம்புகிறேன். பேட்டி எடுத்து பல உண்மைகளை உலகத் தமிழர்களுக்கு கொண்டுபோய் சேர்த்த குமுதம் இணையதள நிர்வாகத்திற்கும், பல உண்மைகளை சரியானநேரத்தில் மிகச் சரியாக பதிவு செய்யும் வகையில் சிறப்பாக பேட்டி எடுத்த அன்பு இளவல் திரு. பா. ஏகலைவனுக்கும் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். வஞ்சகக் கூட்டத்தின் கொட்டத்தை அடக்கி முகிலைக் கிழித்து வரும் முழு நிலவு போல ஈழப்போரில் வென்று தனி ஈழம் என்கின்ற, தமிழர்களுக்கு மட்டுமே அடையாளமான ஒரு நாடு உருவாகும் நாள் வெகு விரைவில் வரும் என்ற நம்பிக்கையோடு....

இந்தப் புத்தகம் முழுக்க ஆங்காங்கே ரத்தமும் சகதியுமான ஈழத் தமிழர்களின் அவலத்தை, வாழ்க்கையை பதிவு செய்யும் விதமாக படங்களை பதிவு செய்திருக்கின்றேன். பார்த்த மாத்திரத்திலேயே நம் அடி நெஞ்சு, ஐயோ என்று அலறித் துடிக்கும். ஓராயிரம் இரவுகள் நம் உறக்கத்தை தொலைத்துவிடும் சோகம், ஈழத் தமிழர்களின் பதுங்கு குழி வாழ்க்கைக்கு சாட்சியாகும். கற்பிணியின் வயிற்றிலிருந்து வெடித்துச் சிதறி, கருகியிருக்கும் அந்த மண்தொடாத குழந்தை... கிழிபட்ட தாயின் வயிற்றிலிருந்து வெளியே கையை நீட்டி, உலக மனித நேயத்தின் கன்னத்தில் ஓங்கி அடிக்கத் துடிக்கும் பிஞ்சுவின் உயிரற்ற கரம்... பதுங்கு குழியே மரணக் குழியாய் போன தடங்கள்.. நெஞ்சு மறத்துப்போன மனிதக் கூட்டமே என்று கேட்க முடியாமலேயே அடங்கிப்போன ஓராயிரம் குழந்தைகளின் ஈ மொய்த்த சடலங்கள்... இப்படி அடுக்கடுக்காய் ஆயிரம் கதைகள், இன்று ஈழ மண்ணில் ரத்தமும் கண்ணீருமாக நனைத்தபடியே தொடர்கிறது. செய்வது சிங்கள அரசு. ஆயுதத்தைக் கொடுத்து கொன்றுபோடு என்று கூறுவது இந்திய அரசு. காரணம் ஒத்தை வரிதான். தலைவர் ராஜீவ்காந்தியின் படுகொலை. செய்தது விடுதலைப் புலிகள். அவர்களின் போராட்டத்தை அங்கீகரிப்பதா? கூடவே கூடாது. மறக்கவும் முடியாது மன்னிக்கவும் முடியாது. அங்கே மக்கள் இருக்கும் வரை புலிகளின் பலமும் இருக்கும். எனவே இனத்தை அழி, என்று முழங்குகிறார்கள். அவற்றிற்க்கெல்லாம் பதில்...இந்த புத்தகத்தில் இருக்கிறது.

நிறையன்புடன்

**திருச்சி வேலுசாமி**

## சமர்ப்பணம்

உலகம் முழுவதும் மனித சமுதாயத்தின் உரிமைகளுக்காக போராடி, தங்களின் இன்னுயிர் ஈந்த போராளிகளுக்கும், என் பொது வாழ்வுப் போராட்டங்களுக்கும், தான் வாழ்ந்தவரை எனக்கு முழுமையாக துணை இருந்து உற்சாகப்படுத்திய, என்றென்றும் என் நினைவில் வாழும் என் தாய்மாமன் திருமிகு **ஜே.கே.ஆர்**க்கு இந்த சிறு நூல் சமர்ப்பணம்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

தலைவர் ராஜீவ்காந்தி படுகொலையில் இருக்கும் மர்மங்களை நான் தமிழகம் முழுவதும், பல மேடைகளில் பேசியிருக்கின்றேன். தொடர்ந்து பேசி வருகின்றேன். அப்படி ஒரு மேடைப் பேச்சைக் கேட்டுவிட்டு குமுதம் இணையதள பேட்டிக்கு அழைத்தார்கள். உலக அளவில் பரந்துபட்ட தமிழ் வாசகர்களை கொண்டது இணையதளம் என்பதை நான் அறிவேன். குறிப்பாக புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள், தாய்த் தமிழகத்து நிகழ்வுகளை அறிந்துகொள்வதற்கு ஆர்வம் காட்டி வருவார்கள். அந்த கருத்தோடு நான் நேர்காணலுக்குச் சென்றேன். தம்பி ஏகலைவன்தான் பேட்டி எடுத்தார். இணையதளத்தில் வெளியானது. தமிழகத்தில் நான் இத்தனைக் காலமும் குரல் எழுப்பி வந்திருக்கின்றேன். ஊர் ஊராக மேடைதோறும் கேள்விகளை எழுப்பியிருக்கின்றேன். ஆனால் கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது. அதே சமயத்தில் குமுதம் இணையதளத்தின் பேட்டி உலக நாடுகளில் இருந்த தமிழர்கள் எல்லாம் என்னை பாராட்டி 'இப்படி ஒரு விடயம் இருப்பது எங்களுக்கு தெரியாமலே இருந்துவிட்டதே' என்று ஆதங்கப்பட்டார்கள். தொடர்ந்து பேசி பாராட்டி வருகிறார்கள். நான் எதிர்பார்க்கவே இல்லை. இத்தனைக் காலமும் மனதளவில் கொஞ்சம் சோர்ந்திருந்த எனக்கு மிகப் பெரிய தெம்பை, ஆதரவைக் கொடுத்தது என்றால் மிகையல்ல.

இனி பேட்டிக்குள்ளாக செல்வோம்.....

**காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினராக இருக்கிறீர்கள். உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இதுவரை எந்த மக்கள் பிரச்சனைக்காகவும் வீதிக்கு வந்து பெரியதாக ஏதும் போராட்டம் நடத்தியதில்லை. ஆனால் சமீபகாலமாக பார்த்தால், எங்கள் தலைவர் ராஜீவ்காந்தியை கொச்சைப்படுத்துகிறார்கள். அதனால் திருமாவளவனை கைது செய்ய வேண்டும், இயக்குனர் சீமானை கைது செய்ய வேண்டும், அமீரைக் கைது செய்ய வேண்டும் என்று போர்க் குரல் எழுப்பி வருகிறார்கள். இது சரியான போக்குதானா?**

காங்கிரஸ் கட்சி ஏதாவது ஒரு வகையிலே செயல்படுவதற்கான அறிகுறியாவது இதன் மூலம் தெரிகிறது என்பது மட்டும்தான் இதில் மகிழ்ச்சி அடையலாமே தவிர, அவர்கள் எடுத்து வைத்திருக்கின்ற இந்த வாதங்களும், இந்த பிரச்சனைகளும் சரியானதல்ல. ராஜீவ்காந்தியைக் கொச்சைப்படுத்துகிறார்கள் என்று மட்டும் சொல்கிறார்களே ஒழிய என்ன கொச்சைப்படுத்தினார்கள் என்று யாரும் சொல்வதில்லை. ஏனென்றால் அப்படி ஒரு நிகழ்வு எங்கேயும் நடக்கவில்லை. திருமாவளவனாகட்டும் அல்லது அமீராகட்டும் யாராக இருந்தாலும் அவர்களெல்லாம் ஊடகத்துறையிலே அரசியல்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

துறையிலே முன்னணியாக இருக்கிறவர்கள். மனித உணர்வுகளை புரிந்துகொண்டால் மட்டும்தான் அதில் வெற்றியடைய முடியும். ஒரு மனிதன் கோரமாக கொலை செய்யப்பபடுவதை நியாயப்படுத்தி, அது சரிதான் என்று அவர்கள் பேசியிருக்கின்ற அளவிற்கு அவர்கள் கடைந்தெடுத்த அயோக்கியர்களாக நான் நினைக்கவில்லை. அதனால் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொல்லாமலேயே தங்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கைப் பயன்படுத்தி கொச்சைப்படுத்தினார்கள், கொச்சைப்படுத்தினார்கள் என்று பேசிவருகிறார்கள்.

**இல்லை, இதை ஒரு பிரச்சாரமாக வைத்து செயல்படுகிறார்கள். அதற்கான அவசியம் என்ன வந்தது?**

ஆமாம். பிரச்சாரமாகத்தான் செய்கிறார்கள். அதைக் கேட்கிற, பார்க்கிற பொது மக்களுக்கு ஏதோ அவர்கள் தவறாக சொல்லியிருப்பார்களோ என்கிற ஒரு எண்ணம் வந்து அதை உண்மைபோல நம்புவார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதைக் கடந்து ஒரு நியாயமான உணர்வு இருக்கிறது. ராஜீவ்காந்தி இந்திய நாட்டின் மதிப்புமிக்கத் தலைவர்

அதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. இந்தியா இன்றைக்கு உலகளவிலே, விஞ்ஞான யுகத்தில் மிகப்பெரிய அளவிற்கு போட்டி போட்டு வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது கம்ப்யூட்டராகட்டும் அல்லது செல்போனாகட்டும் அந்த இரண்டுக்குமே அவர்தான் பிதாமகன். அவர் இல்லாவிட்டால் இன்றைக்கு இந்த முன்னேற்றம் வந்திருக்க முடியாது.

அப்படிப்பட்டவருடைய கொலை, அந்த கொலை நடந்த முறை, உலகத்தையே அதிர்ச்சியடைய வைத்தது. கொலையாளிகள்கூட அதற்காக அனுதாபப்படுகின்ற வகையில் அந்த படுகொலை நடந்தது. அதைப்பற்றி சொல்லுவதற்கு யோக்கியதை யாருக்காவ்து இருக்குமேயானால், அந்த கொலை விசாரணை பல ஆண்டுகாலம் நடந்திருக்கிறது. பதினேழு ஆண்டுகாலம் நடந்திருக்கிறது. பல கோணங்களில். இன்றைக்கு நீங்கள் சொல்லுகிற இவர்களை, இவர்களை கைது செய்ய வேண்டும் என்று சொல்லுகிற தலைவர்களை, நான் பெயரைச்சொல்ல விரும்பவில்லை. அவர்களில் யாராவது ஒருவர் இந்தக் கொலை விசாரணைக்கு உதவியாக ஏதாவது ஒரு




வகையில் செயல்பட்டு, அல்லது கொலை விசாரணையை நடத்துபவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ததுண்டா. குறைந்தபட்சம் அந்த விசாரணையில் என்ன நடக்கிறது என்றாவது தெரிந்துகொண்டு இதைக் கேட்டால் அதில் பொருள் இருக்கும். அந்த உண்மைகளை தெரிந்துகொள்ளவோ, அல்லது உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற உணர்வோ, உந்துதலோ இரண்டுமே இல்லாதவர்கள் வெறும் அரசியல் லாபத்திற்காக பத்திரிக்கையிலே தங்களைப் பற்றி செய்தி வரும், படம் வரும் என்பதற்காகவே இப்படி முரண்பாடான செய்திகளை பேசுவதென்பது என்னைப் பொருத்தவரையில் ராஜீவ்காந்தியை கொலை செய்த கொடியவர்களைவிட இவர்கள் மோசமானவர்கள் என்று எதிர்கால சந்ததியினர் இவர்களை பழிக்கும் என்றே நான் நம்புகிறேன். இது சரியான அணுகுமுறை அல்ல. காங்கிரஸ் கட்சிக்கு அவமானத்தை ஏற்படுத்துவதாகும். மரத்தினுடைய நுனி கிளையிலிருந்து அடிகிளையை வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த கிளை விழுமானால் இவர்களுக்கும் அழிவு என்பது மட்டுமல்லாமல் காங்கிரஸுக்கும் சேர்ந்தே பாதிப்பு வரும் என்று நான் அச்சப்படுகிறேன். அதற்காகவே இந்த வாதங்களை முறியடிக்க வேண்டும் என்று நான் முயற்சி செய்கிறேன்.

**நீங்கள் பொதுக்கூட்டத்தில் பேசும்போது 'தலைவர் ராஜீவ்காந்தியை கொலை செய்ததே அன்னை சோனியாகாந்திதான்' என்று டாக்டர் சுப்ரமணியசுவாமி புத்தகமே அடித்து வெளியிட்டிருக்கிறார். அதற்காக எந்த காங்கிரஸ்காரர்களும் கொந்தளிக்கவில்லை. அந்தளவிற்கு சொரணையற்றவர்களாக இன்றைய காங்கிரஸார் இருக்கிறார்கள் என்று கடுமையாக தாக்கிவருகிறீர்கள். என்ன விஷயம் அது?**

அது என்னவென்றால் ராஜீவ்காந்தியிடைய கொலைக்காக வேண்டி நியாய உணர்வு படைத்தவர்கள் கொதித்துப்போய் இருக்கிறார்கள். அது உண்மை. அந்த கொலைக்கு காரணகர்த்தா அவருடைய மனைவி சோனியாதான் என்று சொல்லுகிறபோது மனிதாபிமானம் உள்ளவர்கள் யாரும் அதிர்ந்து போகாமல் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியால் வாழ்வுபெற்றவர்கள், அதன் மூலம் வளம் பெற்றவர்கள் எல்லாம் இன்னும் கொதித்துப்போயிருக்க வேண்டும். சுப்ரமணியசுவாமி



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010




அந்த புத்தகத்தில் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். ராஜீவ்காந்தியின் கொலைக்கு காரணமானவர்கள் இன்றைக்கு அவருடைய அரசியல் வாரிசுகளாகவும், சொத்துகளுக்கு வாரிசு களாகவும் வலம் வருகிறார்கள் என்று கூறியதோடு நிற்கவில்லை. அடுத்த வரியில் சோனியாகாந்தி, அவருடைய அம்மா பவ்லோமைனா, அர்ஜுன்சிங், மார்க்ரெட் ஆல்வா ஆகிய நான்கு பேர்தான் அந்த படுகொலைக்கு காரணமானவர்கள். அவர்களைப் பிடித்து தீரவிசாரித்தால் இந்தக் கொலைக்குற்றத்தில் இருக்கக்கூடிய உண்மை வெளிவந்துவிடும் என்றும் எழுதியிருக்கிறார். அதை படித்தவுடன் இந்த காங்கிரஸ்காரர்களுக்கு எப்படிப்பட்ட உணர்ச்சி பொங்கியிருக்க வேண்டும். அந்த கட்சியால் எம். எல். ஏ வாக, எம். பி. யாக மந்திரியாக பதவிகளில் அமர்ந்துக்கொண்டு பணம் பதவி பவிசு என அனுபவித்துக்கொண்டு இருப்பவர்களுக்கு ஆத்திரம் வந்திருக்க வேண்டும். ஆவேசம் வந்திருக்க வேண்டும். குமுறும் எரிமலையாக மாறி கொதித்திருக்க வேண்டும். நேரடியாக தெருவில் இறங்கி சுப்ரமணியசுவாமியின் கொடும்பாவியை கொளுத்தியிருக்க வேண்டும். அப்படியிருந்தால் இவர்களுடைய உணர்வில் துடிப்பில் உண்மையிருக்கிறதென்று நம்பலாம். ஆனால் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல், தமிழ்நாட்டிலேயே சுற்றிக்கொண்டிருக்கக்கூடிய திருமாவளவன் போன்ற தம்பிகளை, அல்லது திரைப்படத் துறையில் இருந்தாலும் தமிழ் உணர்வோடு உள்ள சீமான் போன்ற தம்பிகளை கொச்சைப்படுத்தும் விதமாக இவர்கள் பேசுவது, எதிராக செயல்படுவது என்பது துடிப்பில்லை. அது பச்சை நடிப்பு என்றே நான் சொல்கிறேன்.

**இல்லை. இந்தப்பக்கம் வந்து குற்றவாளியே சோனியாதான் என்று டாக்டர் சுப்ரமணியசுவாமி சொல்கிறார். மறுபுறம் சுப்ரமணி சுவாமியும், சந்திராசாமியும்தான் குற்றவாளிகள் என்று நீங்கள் பேசிவருகிறீர்கள். ஆனால் சுப்ரமணியசுவாமியோ 'நான் சுத்தமான வன். ராஜீவ் கொலையில் எனக்கு தொடர்பே கிடையாது. ஜெயின் கமிஷனே விசாரித்து என்னை விடுவித்துவிட்டது. என்மீது களங்கத்தை ஏற்படுத்துவதற்காக சிலர் அப்படி வதந்தியாக பேசி வருகிறார்கள் என்று கூறுகிறார். இதில் எது உண்மை? என்ன காரணம் இதில் இருக்கிறது?**

காரணம் ஒன்றுமில்லை. ஒரு பச்சையான உண்மை துரதிஷ்டவசமாக வெளி உலகத்திற்கு அதிகமாக தெரியாமல் போய்விட்டது. ஏழாண்டு காலங்கள் ராஜீவ்காந்தி படுகொலையை விசாரித்த ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் கடைசியாக, 'இந்த கொலையில் உண்மையான குற்றவாளிகளை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று இந்த கமிஷன் கருதுகிறது. ஆகவே உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிப்பதற்கான விசாரணையை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு கமிஷன் பரிந்துரை செய்கிறது' என்று சொல்லிவிட்டு அடுத்த வரியில், இந்த முடிவுக்கு ஏன் ஜெயின் கமிஷன் வந்திருக்கிறது என்று சொன்னால் 'ஒன் மிஸ்டர் ஈ.வேலுசாமி ப்ரம் தமிர்நாடு அபிடவிட்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாவது கோவிந்தன்குட்டி என்பவர் எழுதிய 'இன்டிமேட் ஸ்டோரி' என்ற புத்தகத்தில் உள்ள சில செய்திகள். மூன்றாவது ஒரு குறிப்பிட்ட நாளில் வெளிவந்த வாஷிங்டன் போஸ்ட் என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வந்திருந்த ஒரு செய்தி. இப்படி ஐந்து செய்திகளை சொல்கிறார்கள். அதில் மனிதனுடைய வாக்குமூலம் என்று கூறுவது என்னுடைய வாக்குமூலத்தை மட்டும்தான். ஜெயின் கமிஷனில் ஆயிரக் கணக்கான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அதில் வேறு எதோடும் ஒத்துப்போகாமல் தனியாக ஒரு செய்தியை சொன்ன வாக்குமூலம் என்றுடைய அந்த வாக்குமூலம்தான்.

இந்த கொலைவழக்கில் சுப்ரமணியசுவாமிக்கும் சந்திரா சாமிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று வாக்குமூலம் தந்த ஒரே மனிதன் நான் மட்டுமேதான். என்னுடைய வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் கமிஷன் இந்த முடிவுக்கே வந்தது என்று





FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



நீதிபதி ஜெயின் கூறியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் விசாரணை வந்திருக்கிறது. வழக்கு விசாரணையில் உண்மைகளைக் கண்டறிய கமிஷனுக்கு கொஞ்சமும் ஒத்துழைப்பு தராதவர் சுப்ரமணியசுவாமி என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதோடு மட்டுமல்லாமல் ஒரு இருபது இருபத்தைந்து பேர்களை குறிப்பாக விசாரிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதில் பொது வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்கள் மூன்றுபேர்தான். அந்த மூன்று பேர்களில் தமிழகத்தில் முதல்வராக இருக்கக்கூடிய கருணாநிதியும், ஜனதாகட்சி தலைவரான டாக்டர். சுப்ரமணியசுவாமியும் சந்திராசாமியும்தான் அவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே கருணாநிதியைப் பற்றி சொல்லுகிறபோது, கொலை நடப்பதற்கு முன்பாக எப்படிப்பட்ட சூழ்நிலைகள் தமிழகத்தில் இருந்தது என்று தெரிந்துகொள்வதற்கு அவருடைய சாட்சியம் தேவை என்பதற்காகதான்.

**மற்றபடி அவருக்கு எந்த தொடர்பும் இல்லை?**

ஆம். மற்றபடி அவருக்கு எந்தவித தொடர்பும் இருப்பதாக ஜெயின் கமிஷன் சொல்லவில்லை. சுப்ரமணியசுவாமி பற்றி நான் பல்வேறு ஆதாரங்களை எடுத்துச் சொன்னேன். அதிலே மிக முக்கியமான ஒரு ஆதாரம் என்பது, ஜெயின் கமிஷனிலேயே மிகப்பெரிய அறிவாளிகள் எல்லாம் இருந்த அந்த கமிஷனிலே நான் போகிறவரை அது ஒரு சாதாரண செய்தி. யார் கண்ணுக்கும் படவில்லை. மே மாதம் 21ம் தேதி இரவு 10.15 மணிக்கு ராஜீவ்காந்தி படுகொலை நடைபெறுகிறது. அந்த இடத்தை காவல்துறையினர் உடனே சீல்வைக்கிறார்கள். 22ம் தேதி காலை ஒன்பது மணிக்குதான் பூர்வாங்க விசாரணையே தொடங்குகிறது. ஆனால் உலகம் முழுவதும் உள்ள பத்திரிகைகள், அது எந்த






நாட்டு பத்திரிகையாக இருந்தாலும் படுகொலை செய்தியைப் போட்டு வால் செய்தியாக 'ராஜீவ்காந்தியை விடுதலைப் புலிகள் கொன்றார்கள் என்று மத்திய சட்ட அமைச்சர் சுப்ரமணியசுவாமி சொன்னார் என்ற செய்தி வந்திருந்தது. என்னுடைய முதல் வாதமே, பூர்வாங்க விசாரணையே 22.ம் காலையில்தான் தொடங்குகிறது. அந்த செய்தியை அவர் 21ம் தேதி இரவு 11 மணிக்குள் தந்திருந்தால்தான் எல்லா நாளேடுகளிலும் அது வரமுடியும். முதல்நாள் 11 மணிக்கே 'இவர்கள்தான் செய்தார்கள்' என்ற செய்தியை 'முடிவெடுத்து' சொல்லுகிறார். அப்படியானால் அவர் எந்த அடிப்படையில் சொன்னார் என்று யார் விசாரித்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு பின்னால்தான் கமிஷனே அவரிடம் கேட்டது. கேட்கிறபோது அவர் யாரோ சொன்னார்கள் என்று மழுப்பினாரே தவிர தெளிவான பதில் எதையும் அவரால் சொல்ல முடியவில்லை. கண்டானை கண்டானை கண்டானைக் கண்டேன் என்பதுபோல் அவருடைய பதில் வந்திருந்தது.

நான் அவரிடம் கேட்டது, 'ஒன்று இவர் பொறுப்புள்ள மத்திய அமைச்சராக பணியாற்றியிருக்கின்றபோது, மோசமான இந்த படுகொலையில் இன்னார்தான் குற்றவாளிகள் என்று சொல்லுகிறபோது, அதற்கான ஆதாரம் அவரிடத்தில் இருந்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் அவர் சொல்லுகிறார் என்றால், அந்த கொலையினுடைய உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு பதிலாக அதை திசைதிருப்புவதற்கான உள்நோக்கம் அவரிடத்திலே இருந்திருக்கிறது என்றுதானே அதற்கு பொருள் என்று சொன்னேன். அதற்கு பின்னாலே அவரை விசாரிக்கிற போது, அந்த 21ம் தேதி நான் டெல்லியிலே இருந்தேன் என்று சொன்னார். அவர் டெல்லியிலே இருந்தேன் என சொன்னதற்கு



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010




ஆதாரமாக ஆங்கில பத்திரிகையில் வந்திருந்த இரண்டு சிங்கிள்கால செய்தியை கமிஷனுக்குத் தந்திருந்தார். அதை கமிஷன் ஒப்புக்கொண்டு வந்திருந்தது. என்னுடைய பார்வைக்கு அதை தந்திருந்தபோது அது என் கண்ணுக்கு பட்டது. நான் மிகச் சாதாரணமானவன்தான். மெத்த படித்த மேதாவிகளுக்கு படாத ஒரு சின்ன செய்தி எனக்கு பட்டது. அந்த இரண்டு செய்திகளுக்கும் கீழே பி.டி.ஐ, பி.டி.ஐ என்று போடப்பட்டிருந்தது. உடனே நான் அந்த கமிஷனக்கு சொன்னேன். இது அவர் டெல்லியில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கொடுத்த செய்தி அல்ல. இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் எந்த மூலையில் இருந்தாவது பி.டி.ஐயில் இருக்கக்கூடிய யாராவது ஒருவருக்கு அந்த செய்தியை சொல்லியிருந்தால் கீழே அப்படி பி.டி.ஐ என்று போடுவார்கள். இவர் உண்மையிலேயே பத்திரிகை நிருபர்களை டெல்லியில் சந்தித்தார் என்பது உண்மையானால் அந்த நிருபர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் யார், யார்? யாரையாவது இவர் குறிப்பிட முடியுமா என்று கேட்டேன். அதிர்ந்துபோய்விட்டார் சுவாமி.

மூன்றாவதுதான் மிக முக்கியமான கேள்வி. அந்த ஒன்றில்தான் அவர் மாட்டிக்கொண்டார். அதுவரை அவர் சிக்கவேயில்லை. 22ம் தேதி மாலையில் அவர் மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தலுக்கு நான்கு நாட்களே இருந்த காரணத்தால் அந்த தீவிர ஏற்பாடு. நான் அவரிடம் உங்களுக்கு மதுரையில் கூட்டம் இருந்ததா என்று கேட்டேன். நினைவில்லை என்று சொன்னார். அதற்கு பின்னால் 21ம் தேதி மாலையில் வெளிவந்திருந்த மதுரைமணி, மாலைமலர் இரண்டு பத்திரிகையிலும் அந்த மாவட்ட கட்சித் தலைவர் 'அடுத்தநாள்






சுப்ரமணியசுவாமி மதுரைக்கு வருவதையும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிலைக்கு அருகிலே நடக்கின்ற பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார் என்று விளக்கமாக அறிக்கையாக தந்து பொதுக்கூட்டத்திற்கு வரவேண்டும் என்ற வேண்டுகோளை அந்த விளம்பரத்தை அவரிடம் காட்டினேன். அதைப் படித்தவுடன் திகைத்துப்போனார். அவரால் மறுக்க முடியவில்லை. சரி ஆம் என்றார். ஆமாம் என்று அதன் பிறகுதான் ஒப்புக்கொண்டார். அடுத்து நான் கேட்டதுதான் மிக முக்கிமான கேள்வி. அவர் மிகப்பெரிய சாமார்த்தியசாலி. எப்படியெல்லாம் கேள்விகளை கேட்பார்கள் என்று முன்கூட்டியே தயார் செய்து அதற்கு ஏற்ற சரியான பதிலையும் சொல்லிவந்தார். ஆனால் அந்த சின்ன கேள்வியைக் கேட்கிறபோது மாட்டிக்கொண்டார்.

**அப்படி என்ன கேள்வியை கேட்டீர்கள்?**

அந்தக் கேள்வி என்னவென்றால் 22ம் தேதி காலை 6.30 மணிக்கு டெல்லியிலிருந்து விமானத்தில் ஏறினால்தான், சென்னைக்கு வந்து சென்னையிலிருந்து மதுரைக்கு சென்று அந்த பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் அவரால் கலந்துகொள்ள முடியும். ராஜீவ் கொலை என்பது 21ம் தேதி இரவு 10.15 மணிக்கு நடக்கிறது. அதற்கு பிறகு யாரும் விமானத்தில் செல்வதற்கு டிக்கெட் உறுதி செய்திருக்க முடியாது. இது முக்கியமான தேர்தல் கால சுற்றுப்பயணம் என்பதால், அடுத்தநாள் கூட்டத்திற்கு போக முதல்நாளே நீங்கள் விமான பயணசீட்டை உறுதி செய்திருப்பீர்கள். அதற்கு பின்னால் அந்த கொலை நடந்ததால் பயண நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டிருக்கும். அப்படி என்றால் நீங்கள் உறுதி செய்த விமான டிக்கெட்டை எப்போது கேன்சல் செய்தீர்கள் என்று கேட்டேன். அப்போதுதான் அவர் முழித்தார். ஏன்? ஏன்? என்று திரும்பத் திரும்பக் கேட்டவுடன், 'நான் மதுரை



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



செல்ல டிக்கெட்டே வாங்கவில்லை' என்று சொன்னார். அப்போதுதான் திரும்பக் கேட்டேன். இந்த உலகமே ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகுதான் அதனதன் நிகழ்ச்சிகளை மாற்றிக்கொண்டது. ஆனால் நீங்கள் மட்டும்தான் அந்த கொலைக்கு முன்னாலேயே நிகழ்ச்சிகளை ரத்துச் செய்திருக்கிறீர்கள்.

அப்படியென்றால் ஏதோ ஒரு முக்கியமான செய்தி இருந்தால்தான் அப்படி செய்திருக்க முடியும். என்ன காரணத்திற்காக அப்படி செய்தீர்கள் என்று கேட்டவுடன், அதிர்ந்துபோய் விட்டார். அவரால் பதில் சொல்ல முடியவில்லலை. உடம்பு முழுவதும் வியர்த்துக்கொட்டியது. சட்டையெல்லலாம் நனைந்து அப்படியே தரையில் சொட்டுச் சொட்டாக கொட்டுகின்ற நிலைமை வந்தது. இந்த நிகழ்ச்சி நடக்கிறபோது அந்த அரங்கத்திற்குள்ளே ராஜீவ்காந்தியின் மகள் பிரியங்கா அமர்ந்திருந்தார். இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றத்திலே உறப்பினராக இருக்கக்கூடிய காங்கேயம் விடியல் சேகர் இருந்தார். முன்னாள் மத்திய அமைச்சர். எஸ்.ஆர். பாலசுப்ரமணியமும் இருந்தார். சுவாமி திகைத்துப்போய் நின்றவுடனேயே மேடையிலே அமர்ந்திருந்த நீதிபதி ஜெயின் அவரது கண்ணாடியைக் கழற்றினார். சுவாமியை அப்படியே உற்றுப் பார்த்தார். கீழே கண்ணாடியை வைத்தார். வழக்கமாக கோர்ட் அட்ஜர்ன்ட் என்று சொல்லும் வார்த்தையைக்கூட அவர் சொல்லவில்லை. அப்படியே எழுந்து உள்ளே சென்றுவிட்டார்.

**மீண்டும் நாளை கூடுகிறது. இந்த தேதியில் கூடுகிறது என்றுகூட நீதிபதி கூறவில்லையா?**

எதுவுமே சொல்லவில்லை. கோர்ட்டே அதிர்ச்சியடைந்து நிற்கிறது. அதிர்ச்சியிலிருந்து யாருமே மீளமுடியவில்லை. ஒரே நிசப்தம். அப்போது, விடியல்சேகர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு 'அண்ணா காங்கிரஸ்காரர்கள் அத்துனை பேர்களும் உங்களுக்கு நன்றி சொல்ல கடமைபட்டிருக்கிறோம். உலகத்திற்கே புரியாத புதிராக இருந்த இந்த படுகொலையில் இன்றைக்குத்தான் ஒரு வெளிச்சம் வந்திருக்கிறது' என்று சொன்னார். இதையே வதேரா என்ற மூத்த வழக்கறிஞரும் சொன்னார்.

**சுவாமி அன்று எங்கிருந்தார் என்று மடக்கி மடக்கி கேட்டிருக்கிறீர்கள். அப்படி கேட்க காரணம்? எங்கு இருந்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

நீங்கள் கேட்டது மிக முக்கியமான கேள்வி. அந்த ஜெயின் கமிஷனில் இப்படிக் கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். கமிஷனில் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கவில்லை. 20ம் தேதி நள்ளிரவு ஒரு மணியை கடந்த நிலையில்தான் சேலம் மாவட்டம் ஆத்தூரில் கூட்டம் பேசிவிட்டு நான் திருச்சிக்குப் போகிறேன். அவர் சென்னை செல்கிறார். நான் அப்போதும் 'இனிமேல் சென்று எப்போது விமானத்தைப் பிடிக்கப் போகிறீர்கள். இங்கேயே தங்கிவிட்டு காலையில் செல்லலாமே' என்று கேட்டேன். அடுத்த கூட்டம் இருக்கிறது. அந்த கூட்டத்தில் கலந்துகொள்ளலாமே என்றேன். இல்லையில்லை மிக முக்கியமான வேலை இருக்கிறது என்று கிளம்பினார். நான் திருச்சிக்கு வந்துவிட்டேன்.

காலையில் 7 மணி இருக்கும். எனக்கு ஒரு போன் வந்தது. சுவாமியின் காரை பின்தொடர்ந்து சென்ற காரில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஜி. குருமூர்த்தி, இன்றைக்கு இறந்துபோய்விட்ட பெருந்துறையைச் சேர்ந்த கோபால், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த,சுவாமிக்கு மிக நெருங்கிய நண்பரான ஏகாம்பரம் ஆகியோர் சென்ற கார் விபத்திற்கு





FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



உள்ளாகிவிட்டது. அதில் ஜி.ஜி. குருமூர்த்திற்கு கொஞ்சம் காயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஏகாம்பரத்திற்கு கால் எலும்பு முறிந்து அச்சிறுப்பாக்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இதை செய்தியாக சொன்னார்கள். சுவாமி வந்தாரா, பார்த்தாரா, அவருக்கு இந்த செய்தி தெரியுமா என்று கேட்டேன். தகவல் சொல்லிவிட்டோம். ஆனால் வந்து பார்க்கவில்லை என்று சொன்னார்கள். அந்த செய்தியை சுவாமிக்குச் சொல்ல வேண்டும். விமானத்தில் டெல்லி சென்றிருப்பாரென்றால், சென்னையில் 6.40க்கு அந்த விமானம். ஒன்பது மணிக்கு டெல்லி சென்றடையும். அவர் வீட்டிற்கு போனால் 10 மணிக்குள்ளாக சென்றுவிடுவார். அதற்கு மேல் நேரம்போக வாய்ப்பில்லை. வீட்டிற்கு செல்லாமல் போனாலும் அலுவலகம் சென்றிருப்பார். ஆனால் எப்போது டெல்லி சென்றாலும் அவருடைய மனைவிக்கு தகவல் சொல்லிவிடுவது வழக்கம். அதற்காக ஒரு 10.30 மணிக்கு அவரது வீட்டிற்கு போன் செய்தேன். அப்போதெல்லாம் செல்பேசி கிடையாது.

நான் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, உச்சநீதிமன்ற வழக்றிஞரான அவருடை மனைவி ரொக்ஸானா போனை எடுத்தார். என்னுடைய குரல் மிக நன்றாகத் தெரியும். அவர்கள் குடும்பத்தில் ஒருவராக பழகியிருக்கிறேன். என்னவென்று கேட்டார். நான் சுவாமியிடம் பேச வேண்டும் என்று





சொன்னேன். ஏன் தேவையில்லாமல் இங்கே போன் செய்கிறீர்கள். அவர் சென்னையில்தானே இருக்கிறார். அங்கே பேசுவதை விட்டுவிட்டு இங்கே ஏன் பேசுகிறீர்கள் என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு சென்னையிலே அவருக்கு மிக நெருக்கமான நண்பரான மோதிலால், இன்றைக்கும் அவர் இருக்கிறார். அதனால்தான் அவர்களுடைய பெயரை எல்லாம் சொல்கிறேன். அவசரகால சட்டத்தின்போது சுவாமி அவருடைய வீட்டில்தான் ஒளிந்துக்கொண்டு இருந்தார். அந்தளவிற்கு நெருங்கிய நண்பர். மோதிலாலின் மனைவியும், சுவாமியின் மனைவியும் கல்லூரித் தோழிகள். அந்த அளவிற்கு குடும்ப உறவு. அப்படிப்பட்ட மோதிலாலிடம் கேட்டேன். அவரோ என்ன வேலுச்சாமி, அவர் டெல்லி போவதாக சொல்லிவிட்டுப் போனாரே என்று சொன்னார். இன்னொரு நண்பரான 'சோ' விடம் கேட்டேன். அவரும் அதே பதிலைத்தான் சொன்னார். டெல்லியில் உள்ள அவரது மனைவியோ சுவாமி சென்னையில் இருக்கிறார் என்று கூறுகிறார். சென்னையில் உள்ளவர்களோ அவர் டெல்லியில்தானே இருக்கிறார் என்கிறார்கள். அவர் எங்கு போனார் என்று யாருக்குமே தெரியவில்லை.

**இந்த கேள்வியை கமிஷனில் கேட்டிருக்கிறீர்களா?**

ஆம் கமிஷனில் இதை கேட்டிருந்தேன். அதாவது அவருக்கு மூவ்மென்ட் ரிப்போர்ட் என ஒரு பைல் இருக்கும். அதை



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



எடுத்துப் பார்த்து அன்றைய தேதியில் சுவாமி எங்கே இருந்தார் என்று சொல்ல வேண்டும் என்று கேட்டிருந்தேன். அப்போது கமிஷன் அதை மத்திய அரசிடம் கேட்டிருந்தது. இதெல்லாம் பாவம் நம் சாதாரண மக்களுக்குத் தெரியாது. அந்த பைல் காணவில்லை என்று மத்திய அரசு சொல்லிவிட்டது. அதெப்படி இந்த குறிப்பிட்ட பைல் மட்டும் காணாமல் போய்விட்டது என்ற மர்மம்தான் புரியவில்லை. அதற்கு பின்னால்தான் நான் டெல்லியில் இருந்தேன் என்று அவர் அந்த பி.டி.ஐ. செய்தியை கொடுத்திருந்தார். பிறகுதான் மாட்டிக்கொண்டார்.

**குறிப்பாக நீங்கள் அந்த இடத்தில்தான் அவரை மடக்கியிருப்பதாக கூறுகிறீர்கள். அவர் எங்கு இருந்தார் என்பதை கூறவில்லையே?**

சென்னையில்தான் இருந்தார். இந்த ஊடகத்தின் வாயிலாக உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் இதை தெரிந்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை. திருடுகிறவர்கள் யாரும் ஆதாரத்தை வைத்துக்கொண்டு திருடுவதில்லை. விபச்சாரம் செய்கிறவன் யாரும் போட்டோ எடுத்து வைத்துக் கொண்டு செய்வதில்லை. இவ்வளவு பெரிய கொலையைச் செய்தவர்கள் ஆதாரத்தை வைத்துக்கொண்டு செய்யமாட்டார்கள். அன்றைக்கு சென்னையில்தான் இருந்தார். ஓட்டல் சிந்தூரியில் பதிவு செய்யப்படாத அறையில் சந்திராசாமி தங்கியிருந்தார். அங்கேதான்



சுப்ரமணியசுவாமியும் தங்கியிருந்தார். அங்கிருந்து மதியத்திற்கு மேல்தான் சாலை வழியாக பெங்களூருக்குச் சென்று, அங்கிருந்து ஒரு தனி விமானத்தில் டெல்லி போயிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அங்கே ஆசிரமத்தில் மிக முக்கியமான நிகழ்வு நடந்திருக்கிறது. அவர் போகிறபோதே தகவல் சொல்லி இரண்டு கூடை நிறைய லட்டுகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். இவர் போனவுடன் ஆசிரமத்திலுள்ள எல்லோரையும் வரிசையாக வரச்சொல்லி மகிழ்ச்சியோடு ஒவ்வொருவருக்கும் ஒரு லட்டு கொடுத்திருக்கிறார். அவர்கள் என்ன சேதி என்று கேட்டிருக்கிறார்கள். இன்று முக்கிய நல்ல மகிழ்ச்சியான நிகழ்வு ஒன்று நடக்கப் போகிறது. அதற்காகத்தான் முன்னமே ஸ்வீட் தருகிறேன் என்று சந்திராசாமி சொல்லியிருக்கிறார். இந்த தகவலை அந்த ஆசிரமத்தில் இருந்த ஒருவரே ஜெயின் கமிஷனில் சாட்சியமாக சொல்லியிருக்கிறார். இது எல்லாமே மாலை ஆறு மணிக்கு மேல்தான் நடந்திருக்கிறது. ஆறு மணிக்கு முன்பு சந்திராசாமி டெல்லியிலே இல்லை. இதற்கான ஆதாரத்தை தருவதற்கு தனி மனிதனான என்னால் முடியாது. ஆனால் இந்த அரசாங்கம், அல்லது இதை விசாரிக்கின்ற கமிஷன் இந்த உண்மையை கண்டுபிடித்து உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை என்பது வேதனையான கசப்பான உண்மை.





FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



**நீங்கள் இந்தளவிற்கு தீவிரமாக இறங்க காரணம் என்ன?**

காரணம் என்று எதுவும் இல்லை. ஒரு சராசரி அரசில்வாதி எப்போதும் லாபநட்ட கணக்காகவே செயல்படுவார்கள்.

**நீங்கள் எடுத்திருக்கின்ற இந்த நிலைப்பாடு மிகச் சாதாரணமானதல்ல. அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. உயிருக்கே உத்தரவாதமில்லாதது...**

இந்த கேள்வியை பலரும் கேட்டிருக்கிறார்கள். எனக்கு சந்தேகம் வந்தவுடன் நீங்கள் நம்பமாட்டீர்கள், இரண்டு மூன்று நாட்களாக என்னால் தூங்கமுடியவில்லை. அதற்கும் ஆதாரம் இருக்கிறது. சிலபேர் என்னைப் பார்த்துப் பயந்து, என்ன என்ன என்று கேட்டு 'பைத்தியம் பிடித்தவர் போல இருக்கின்றாரே' என்றார்கள். அப்படி இருந்தேன் நான். அதற்குப் பின்னால் சென்னையில் இருக்கக்கூடிய ஒரு நண்பர், என்னை கடற்கறைக்கு அழைத்துச் சென்றார். மூன்று மணிநேரம் அப்படியே உட்கார்ந்திருக்கிறேன். எதுவும் பேசிக்கொள்ளவில்லை. இரண்டு பேரும் அப்படியே இருந்தோம். மௌனத்தைக் கலைக்கும் விதமாக நண்பர்தான் 'என்னண்ணே உங்களைப் பார்த்தால் பயமாக இருக்கிறதே. என்னாச்சு' என்றார். என்னால் சொல்லவும் முடியவில்லை. சொல்லாமல் இருந்தால் இதயமே வெடித்துவிடும் போலிருக்கிறதே என்ன செய்வது எனக்கூறிவிட்டு, என்





சந்தேகத்தை எல்லாம் அவரிடம் கூறினேன். அந்த நண்பரும் உயிரோடுதான் இருக்கின்றார். அவர் நக்கீரன் இதழில் இணை ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அ. காமராஜ்தான்.

**அப்படி ஒரு சந்தேகம் வருவதற்கு காரணம்?**

அந்த சந்தேகம் வருவதற்கும் வந்ததற்கும் பல காரணங்கள் இருக்கின்றது. அதில் மிக முக்கியமான காரணத்தை இப்போது சொல்கிறேன். மே மாதம் 21ம் தேதி இரவு பத்தேகால் மணிக்கு அந்த மனித குண்டு வெடிக்கிறது. அதில் பலர் இறக்கிறார்கள். ராஜீவ்காந்தி அருகில் இருந்த எல்லோரும் இறந்து போகிறார்கள். ஒரே ஒருவரைத் தவிர. அந்த ஒருவர்தான் பெண் சப் இன்ஸ்பெக்டர் அனுசூயா. அவர் பிழைக்கவே மாட்டார் என்று சொன்னார்கள். அவர் பிழைத்து இன்றைக்கும் உயிரோடு இருக்கின்றார். இந்த ஊடகத்தின் வாயிலாக நான் சொல்லுகின்ற இன்னொரு முக்கியச் செய்தி, கேவலம் ஒரு பிச்சைக்காரன் கொலை செய்யப்பட்டால்கூட அந்த கொலை வழக்கில் பிரதானமாக கருதப்படுவது ஐ-விட்னஸ். ராஜீவ் கொலையில் ஐ-விட்னஸாக இருப்பது அந்த பெண் சப் இன்ஸ்பெக்டர்தான். அவருடைய சாட்சியத்தை வைத்து எந்த விசாரணையும் தொடங்கப்படவில்லை. அவரை யாரும் இந்த விசாரணைக்குள் ளாக அழைத்தாகவே தெரியவில்லை. நான் அவரை மீண்டும்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



சந்தித்தது பல்முனை நோக்கு புலனாய்வுக்குழு என்னை அழைத்து விசாரித்த போதுதான். ஒரு நாள் அந்த அறைக்குள்ளே அனுசூயா இருந்தார். எனக்கு அடையாளம் தெரியவில்லை. நான் அவரை மருத்துவமனையில் பார்த்தபோது உடல் முழுக்க தீக்காயத்தோடு இருந்தார். சாதாரணமாக பார்த்தபோது தெரியவில்லை. விசாரணை அதிகாரியான டி.எஸ்.பி ஒருவர் சிரித்தபடியே 'இவரை உங்களுக்குத் தெரிகிறதா' என்று கேட்டார். எனக்கு தெரியவில்லை என்று சொன்னேன். அனுசூயாவோ 'எனக்கு உங்களைத் தெரிகிறது' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை ரகசியத்தைச் சொல்லுங்கள் என்றேன். நான்தான் அனுசூயா என்று சொன்னார். கை கால்களில் இரண்டு மூன்று விரல்கள் இல்லாமல் தீவிர சிகிச்சைக்குப் பிறகுதான் உயிர் பிழைத்திருந்தார். சிரித்துவிட்டு இந்த விசாரணைக் கமிஷனுக்கு நான் டெபுடேஷனில் பணியாற்றுகிறேன் என்று சொன்னார். அவர் அரசு மருத்துவமனையில் மிக மோசமான நிலையில் இருந்த போது பார்த்த இரண்டே இரண்டு மனிதர்கள் நானும், டாக்டர் சுப்ரமணியசுவாமியும்தான்.

சுவாமி அப்போது மத்திய அமைச்சராக இருந்தார். விபத்து நடந்து மூன்று நாட்கள் கழித்து வந்து பார்த்தோம். அனுசூயா பிறந்த மேனியில் இருந்ததால் யாருக்கும் பார்க்க அனுமதியில்லை என்றிருந்தார்கள். எங்கள் இருவரை மட்டும்





அனுமதித்தார்கள். அன்று நான் பார்த்த காட்சி இன்றும் என் மனதை உலுக்குகிறது. உருக்குகிறது. காவல் துறையினர் மீது எவ்வளவு கோபம் இருந்தாலும் அந்த ஒரு பெண்மணியினுடைய தியாகமே காவல் துறையினுடைய மரியாதையை கூட்டுவதாக நான் மதிக்கிறேன். அந்த மோசமான கட்டத்தில்கூட 'நான் ஏன் பிழைத்தேன்' என்று புலம்பிய படி அழுதார். நான் 'பயப்படாதே. டாக்டர்கள் உனக்கு ஒன்றும் இல்லை. பிழைத்துக் கொள்வாய் என்று கூறியிருக்கிறார்கள்' என்று ஆறுதலுக்காக சொன்னேன். எனக்கும் நம்பிக்கை இல்லை பிழைப்பார் என்று. 'இல்லை அண்ணா. நான் பிழைப்பதற்காக சொல்லவில்லை. ஒரே ஒரு நிமிடம். நான் இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருந்தால் அந்த வி.ஐ.பி.யை நான் காப்பாற்றியிருக்க முடிந்திருக்குமே. நான் செத்திருந்தாலும் பரவாயில்லை. நான் சாகிறவரை ஒவ்வொரு நாளும், இந்த எண்ணமே என்னை சித்ரவதை செய்யுமே. இதற்கு விமோசனமே கிடையாது என்று சொல்லி அழுதார்.

நீங்கள் முதலில் கேட்ட கேள்விக்கு இப்போது வருகிறேன்.

இந்த விசாரணையில் என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று என தெரிந்தும் நான் பிரமாண வாக்குமூலம் தந்ததற்குக் காரணம், எனக்குத் தெரிந்த இந்த உண்மையை உரிய இடத்தில் சொல்ல முடியாமல் தவித்த அந்த கொஞ்ச காலகட்டத்தில், இரவும் பகலும் தூங்கமுடியாமல் நான் தவித்த தவிப்பு, என் மனதின் ஆழத்தில் இருந்த அந்த உந்துதல் என்னை நிலைகுலைய வைத்திருந்தது. அதை வெளியில் சொன்னதற்கு பின்னாலேதான் என் மனபாரம் குறைந்தது. நான் நிம்மதியானேன். இனி செத்தாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு வந்தேன்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



இதே கேள்வியைத்தான் சோனியாகாந்தியும் என்னிடத்தில் கேட்டார்.

**ஆமாம் அப்படி கூறிவருகிறீர்கள். என்ன கேட்டார். எப்போது அப்படி கேட்டார் என்று கமிஷனிலோ அல்லது நண்பர்களிடத்திலோகூட சொன்னதில்லை. இத்தனை ஆண்டுகளாக அதை மூடி மறைக்க வேண்டிய ரகசியம் என்ன. எதற்காக அப்படி மறைக்கிறீர்கள்?**

ஒரு நாகரீகம் கருதிதான் அதை மறைத்து வந்தேன். 15 ஆண்டுகாலம் மனதிற்குள் பூட்டி அடைகாத்து வைத்திருந்த அந்த ரகசியத்தை முதன்முறையாக இந்த ஊடகத்தின் மூலமாக உலகம் எங்கும் உள்ள தமிழர்களுக்கு, தமிழ் சமூகத்தின் மீது துடைக்க முடியாத பழி விழுந்ததே என்ற ஆதங்கத்திலிருக்கும் சகோதர சகோதரிகளுக்கு, இதன் மூலமாக ஒரு ஆறுதல் அடைவார்கள் என்ற நம்பிக்கையில் இப்போது சொல்கிறேன். நான் டெல்லியிலே ஜெயின் கமிஷன் உள்ளே நுழைவதற்காக அபிடவிட் தயார் செய்து நுழைகிறபோது, கமிஷனுக்கு செயலாளராக இருந்தவர் பெயர் மனோகர்லால். அவரிடம் போய் அபிடவிட் மனுவை நீட்டினேன். போகிறபோது 'வாருங்கள் வாருங்கள்' என்று என்னை முகமலர்ச்சியோடு வரவேற்றார். என்ன என்று கேட்டார்கள். ஒரு பிரமாண வாக்குமூலத்தை தரவேண்டும் என்றேன். சிரித்துக்கொண்டே அமருங்கள் என்றார்.





தேனீர் கொண்டுவரச் சொன்னார். எனது மனுவை கையில் வாங்கி வைத்துக்கொண்டார். தேனீர் வந்தது. இருவரும் குடித்தோம். அதன் பின்னர் நான் தந்த பிரமாண பத்திரத்தை படித்தார். படிக்கப் படிக்க அவர் முகம் மாறுகிறது. என்னைப் பார்த்தார். ஆர் யூ அக்யூஸிங் மிஸ்டர் சுவாமி என்று கேட்டார். ஆம், என்று சொன்னேன். அந்த பைலை அப்படியே தூக்கி டேபிள்மீது அடித்தார். அந்த வினாடியே 'நாம் மிகப் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்ருப்பதை உணரத் தொடங்கினேன். எனக்குள் ஒரு அச்சம் வந்தது. அதற்குப் பின்னால் அவர் என்னிடம் பேசவே இல்லை. ஐயா உங்களிடம் மனு தந்திருக் கிறேன். எப்போது வரட்டும் என்று கேட்டேன். தகவல் வரும் நீ போகலாம் என்று கடுகடுப்பாக சொன்னார். வெளியே வந்தேன். நான் இருப்பதோ டெல்லி. எனக்கு இந்தி தெரியாது. யாரிடமும் பெரிய பழக்கமும் இல்லை. எனக்கு பாதுகாப்பு இல்லாத சூழ் நிலை புரிந்தது. வழக்கமாக தங்குமிடத்தில் தங்கவும் அச்சப்பட்டேன்.

அந்த நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விடுதியாக மாறி மாறி தங்கிவந்தேன். அப்போதெல்லாம் இந்த செல்போன்கள் இல்லாத காரணத்தால், மனைவியிடம் பேச வேண்டும் என்றால்கூட உடனே பேச முடியாது. நான் எங்கிருக்கிறேன் என நானாகப் பேசினால்தான் தெரியும். அந்த கட்டத்தில்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



டெல்லியில் இன்றைக்கு அதிமுகவின் பாராளுமன்ற அலுவலகத்தில் பணியாற்றுகின்ற சந்திரசேகர் என்பவர், அப்போது அவர் அந்த அலுவலகத்தில் இல்லை. சாதாரணமாக இருந்தார். அவருடன் எனக்கு பழக்கம் இருந்தது. அவர் தஞ்சாவூர்காரர் என்பதால் நெருக்கமாக,'இப்படியேல்லாம் இருக்கிறதே' என்று பயந்தபடி சொன்னேன். ஆமாம் நீங்கள் மிகப்பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைக் காப்பாற்றுவதற்கு யாருமே இல்லை. ஜாக்கிரதையாக இருங்கள் என்று கூறினாரே ஒழிய அவராலும் ஏதும் உதவ முடியவில்லை. எனவே நான் எங்கிருக்கிறேன் என்பதை ஒவ்வொரு நாளும் அவருக்கு மட்டும் சொல்லிக்கொண்டு இருப்பேன். என் மனைவியிடம் அவரது தொலைபேசி எண்ணை கொடுத்து ஏதாவது அவசர செய்தி என்றால் அவரிடம் கூறு. எனக்கு வந்து சேர்ந்துவிடும் என்று கூறியிருந்தேன். அன்றைய நாள் இப்படித்தான் இருந்தது. ஒரு நாள் இரவு இரண்டு மணிக்கு மேல் அவர் என் அறைக் கதவைத் தட்டினார். திறந்ததும் அதிர்ந்தேன். என்ன என்ன? ஏதாவது முக்கியச் செய்தியா என்றேன். நான் இருக்கும் இடம் அவருக்கு மட்டுமே தெரியும் என்ற காரணமும் கூட. ஒரு முக்கிமான செய்தி. ரொம்பவும் அவசரம். வேறு வழியே இல்லை. அதனால்தான் இந்த நேரத்தில் வந்துவிட்டேன் என்றார். அப்படி என்ன செய்தி என்றேன்.



உங்களைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக ராஜீவ்காந்தி யினுடைய மனைவி ஒரு வாரகாலமாக முயற்சித்துக்கொண்டிருக் கிறார். ஆனால் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்றைக்குத்தான் எனக்கு அந்த செய்தி வந்தது. ஆனால் நான் நீங்கள் இருக்கும் இடத்தைச் சொல்வதா வேண்டாமா என்று விட்டுவிட்டேன். ஆகவேதான் உங்களைத் தேடி வந்தேன் என்றார். எப்படி உங்களுக்குத் தெரியும் என்று கேட்டேன். அவர் சொன்னார். சோனியா காந்தியின் குடும்பத்தோடு நெருக்கமாக இருப்பவர், மிக மூத்த உறுப்பினர், ராஜ்யசபா உறுப்பினர் ஆர். ஆர். சாகு என்கிற ரஜினி ரஞ்சன் சாகு. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு கொஞ்ச காலம் பார்வையாளராக பணியாற்றியவர். ஆகவே அவரிடம் அந்த பொறுப்பைக் கொடுத்து என்னை பார்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் சோனியா. அவர் பல வகையிலும் முயன்று என்னைக் கண்டுபிடிக்க முடியாமல் அதிமுகவின் ராஜ்யசபா உறுப்பினராக இருந்த, தஞ்சையைச் சேர்ந்த ஜி. சுவாமிநாதனைச் சந்தித்து, எனக்கு ஒரு உதவியைச் செய்ய முடியுமா? வேலுச்சாமி என்பவர் இருக்கிறார். நீங்கள் அவருக்கு பக்கத்து ஊர்க்காரர்தானே. டெல்லியில் அவர் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. அவரை கண்டுபிடித்து தர முடியுமா? மிகவும் அவசரம் என்று சொன்னார். அப்படிச் சொல்லுகிறபோது





FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



நான் சுவாமிநாதனின் அருகில் இருந்தேன். அப்போது எங்கே தங்கியிருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா என்று என்னிடம் கேட்டார். சொல்வதா வேண்டாமா என்று தெரியவில்லை. விசாரித்து சொல்வதாகச் சொன்னேன். என்று நடந்ததை சொன்னார் சந்திரசேகர்.

நான் அன்றைக்கு இருந்த மனநிலையில் 'எதைத் தின்றால் பித்தம் தெளியும்' என்றிருந்தேன். மிகச் சாதாரணமான நான் இவ்வளவு பெரிய படுகொலை சதிவலையில் மாட்டிக்கொண்டிருக்கிறேனோ என்கிற அச்சம் இருக்கிறபோது, எப்படியாவது ஏதாவது பாதுகாப்பு கிடைக்கிறதா என்கிற மனநிலையில் இருந்தேன். அதனால் சந்திப்பதற்கு சரி என்றேன். அதன் பின்னால் காலையில் எழுந்ததும் பெரோஷா சாலையில் இருக்கக்கூடிய ஆர். ஆர். சாகுவின் பங்களாவிற்கு என்னை அழைத்துச் சென்றார் சந்திரசேகர். காலையில் ஒரு 8.30 மணி அளவில் போகிற போது அவரது வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே காத்திருக்கச் சொல்லிவிட்டு, என்னை அழைத்துக்கொண்டு போய் டைனிங் ஹாலில் அமரவைத்தார். அப்போது கல்லூரி மாணவியாக இருந்த அவரது மகளை அழைத்து காலை சிற்றுண்டியை பறிமாறினார். சாப்பிட்டோம். உடனே வாருங்கள் என்றார். நான் என்னவென்று கேட்டபோது 'நீங்கள் இப்படியொரு பிரமான வாக்குமூலம் கொடுத்திருப்பது




FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

10, ஜன்பத் ரோட்டிற்கு தெரிந்திருக்கிறது. அது சோனியா காந்தியின் இல்லம். அவர் எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று சொன்னதின் பேரிலேதான் உங்களைஇப்படி தேடினேன் என்றார். நல்லவேளை கிடைத்தீர்கள் வாருங்கள் போகலாம் என அங்கே அழைத்துச் சென்றார்.

நாங்கள் இப்படி திடீர் என்று சொல்லாமல் கிளம்பியதால் அன்றைக்கு சோனியா அவர்களைச் சந்திக்க முடியவில்லை. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி வெளியில் சென்றுவிட்டதாகவும் இரவு எட்டு ஒன்பது மணிக்குள்ளாக திரும்புவார் என்றும் உதவியாளர்கள் கூறினார்கள். நாங்கள் வந்த தகவலை கூறும்படி சொல்லி திரும்பினோம். என் பெயரை கேட்டவுடன் உதவியாளர் கள் 'இவரைத்தான் மேடம் அவர்கள் ஒரு வாரமாக எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். அவசியம் நாளை காலை 11 மணிக்கு வந்துவிடுங்கள் என்றார் . திரும்பிவிட்டோம்.


பிறகு டெல்லியில் தமிழகத்தைச் சேர்ந்த நாளிதழின் தலைமை நிருபராக இருந்த நூருல்லாவைச் சந்தித்த போது மேடம் சந்திக்க அழைத்தது பற்றி மட்டும் சொன்னேன். அவரோ நம்பவே இல்லை. சோனியாகாந்தி யாரையுமே சந்திக்காமல் இருக்கிறார். பிரதமரைக்கூட சந்திப்பதில்லை. உங்களை எப்படி? எனச் சிரித்தார். உண்மைதான் என்றேன். நம்பாமல் நானும் கூட வருகிறேன் என்றார். அடுத்த நாள் காலை 10ஜன்பத் வீட்டிற்குச் சென்றேன். முதல்நாளே சொல்லிவிட்டதால் ஆர்.ஆர். சாகு வரவில்லை. இருவர் மட்டுமே சென்றோம். முழுமையாக சோதனைப் போட்டு உள்ளே அழைத்தார்கள். ஒரு இடத்தில் பத்திரிகையாளர் நூருல்லாவை வெளியே உட்காரவைத்துவிட்டு நான் மட்டும் சென்றேன். விசாரணை சோதனைக்குப் பிறகு உள்ளே விட்டார்கள். அப் போது சோனியாகாந்தி அவர்கள் அரசியலிலேயே கிடையாது.





பல விஷயங்களை அவரிடம் கூறினேன். என்ன என்பதையெல்லாம் வெளியே சொல்வது நாகரீகமாகாது. ஒரு பதிவுக்காகத்தான் இந்த சந்திப்பையே இத்தனை வருடங்கள் கழித்து சொல்கிறேன். ஆகவே என்ன பேசினோம் என்பதற்குள் போக விரும்பவில்லை. அப்போது நீங்கள் கேட்டீர்களே, அதே கேள்வியைத்தான் சோனியா அவர்களும் என்னிடம் கேட்டார்கள். இப்படி ஒரு வாக்குமூலத்தைத் தந்தால் அதில் உங்கள் உயிருக்கே ஆபத்து இருக்கிறது என புரிகிறதா, தெரிகிறதா எனக் கேட்டார்கள். புரிகிறது என்று சொன்னேன். உயிர் பயம் இல்லாமல் வந்திருக்கிறீர்கள் என்றால் அதைத் தாண்டி என்ன எதிர்பார்ப்பு உங்களுக்கு இருக்கிறது என்றார். எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை என்றேன். பிறகு எதற்காக இப்படி ஒரு வாக்குமூலத்தைத் தந்தீர்கள் என்றார். அப்போதும் நான் இதையேதான் சொன்னேன். இந்த உண்மையை எனக்குத் தெரிந்து உரிய இடத்தில் சொல்லாமல் இருப்பதால் என் மனம் என்னை சித்ரவதை செய்கிறது. பாடாய்ப் படுத்துகிறது. என்னால் தூங்க முடியவில்லை. சரியாக சிந்திக்க முடியவில்லை. சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லிவிடுவோம். அதற்குப் பின்னால் என்ன நடந்தாலும் பரவாயில்லை என்கிற மனநிலையோடு வந்ததாகச் சொன்னேன். அதற்குப் பின்னால் எல்லாச் செய்திகளையும் கேட்டுவிட்டு, கடைசியாக ஒன்று கேட்டார்.





'என்னிடத்தில் இருந்து நீங்கள் என்ன உதவியை எதிர்பார்க்கிறீர்கள்' என்றார். எந்த உதவியையும் எதிர்பார்த்து உங்களிடம் நான் வரவில்லை. என் கடமையைச் செய்திருக்கிறேன் அவ்வளவுதான் என்றேன். அப்போதுதான் லேசாக அவர் புன்முறுவல் செய்தார்.


உங்களுக்கு பல நேரங்களில் ஆபத்து வர வாய்ப்பிருக்கிறது. ரவுண்ட் த கிளாக் என்று சொல்லி, எந்த நேரத்திலும் உங்களுக்கு என்ன உதவி என்றாலும், ஒரு நாலைந்து தொலைபேசி எண்களை அவரது உதவியாளர் பிள்ளையிடம் சொல்லி பக்கத்திலிருந்த தாளை எடுத்துக் கொடுத்து எழுதிய பிறகு என்கையிலே கொடுத்து, இந்த எண்களில் ஏதாவது ஒன்றின் மூலமாக என்னை தொடர்புகொள்ளுங்கள். அல்லது போனை எடுப்பவர்கள் யாரிடமும் சொல்லுங்கள். என்னாலானதை செய்கிறேன் என்றார். இந்த நிமிடம் வரை எந்த தொலை பேசியிலும் நான் அவரிடம் பேசியதில்லை. ஏனென்றால் அப்படி பேசி உதவியைப் பெற்றால், நான் செய்த காரியத்திற்கு விலை பேசுவதாக அமையும் என்று நான் நினைத்தேன்.

**அதன் பிறகு நீங்கள் அவரை சந்திக்கவே இல்லையா?**

ஆனால், அன்று வெளியே வந்து மீண்டும் உள்ளே திரும்பினேன். என்ன என்பதைப் போன்று பார்த்தார். நீங்கள்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



எனக்கு ஒரு உதவியைச் செய்ய வேண்டும் என்றேன். என்ன என்றார்கள். என்னுடைய வாக்குமூலத்தை செயலாளரிடம் கொடுத் திருக்கிறேன். இதை கமிஷன் ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் என்னுடைய சந்தேகங்களை கேள்வியாக அங்கே வைக்க முடியும். அவர்கள் என் மனுவை ஏற்க மறுத்துவிட்டால் என் கருத்தை பதிவு செய்யவே முடியாது. ஆகவே அந்த கமிஷனில் என்னுடைய வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் ஏதாவது ஒரு வகையில் உதவ முடியுமானால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்று கேட்டேன். என்றைக்கு அதற்கான விவாதம் வருகிறது எனக் கேட்டார். நான் தேதியைச் சொன்னேன். அந்த நேரத்தையும் சொன்னேன். நான் அந்த கமிஷன் நடைபெறுகிற விஞ்ஞான்பவனில் அமர்ந்திருக்கிறபோது, சரியாக அந்த நேரத்திற்கு ஒரு பரபரப்பு. எல்லோரும் திரும்பி பார்க்கிறபோது, துப்பாக்கி ஏந்திய பாதுகாப்போடு சோனியாவின் திருமகள் பிரியங்கா உள்ளே வேகமாக வந்தார். ஏழாண்டுகாலம் நடைபெற்ற அந்த ஜெயின் கமிஷன் வரலாற்றில் ராஜீவ்காந்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒரே ஒரு உறுப்பினர், பிரியங்காதான் மூன்று முறை வந்தார். அந்த மூன்று முறையும் என்னுடைய வாக்கு மூலத்தைப் பதிவு செய்த நாள், நான் சுப்ரமணியசுவாமியை குறுக்கு விசாரணை செய்த இரண்டு நாள் என மூன்று முறை மட்டுமே பிரியங்கா வந்தார்.

என் தரப்பு நேரம் மட்டும் இருப்பார். அதற்கு பின்னால் எழுந்து சென்றுவிடுவார். கமிஷனில் உள்ள மற்றவர்கள்





விசாரணையில் இருக்கமாட்டார். அவர் வந்து அமர்ந்த பின்னால்தான் நீதிபதிக்கே ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டு, என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் வந்தது. அந்த வகையில்தான் அவர்கள் எனக்கு உதவினார்கள். எனக்கு ஒரு புரியாத புதிர் என்னவென்றால், அந்த பிரியங்கா நேரிலேயே வந்துவிட்டார். குற்றவாளி கூண்டிலே நிறுத்தி வைக்கப்பட்டு சுப்ரமணியசுவாமி தவித்து, மிரண்டு, சட்டையெல்லாம் நனைந்து வேர்வை கொட்டுகிற அந்த காட்சியை பார்த்தவர் அதற்குப் பின்னால், சுவாமிக்கு அதிலே பங்கு இருக்கிறது எனபதை உணர்ந்ததற்குப் பின்னால், இன்றுவரை ஏன் அந்த மனிதனை உரிய முறையில் விசாரிக்கவில்லை என்பதுதான்.

**நீங்கள் பேசிக்கொண்டு வந்ததில் நிறைய குழப்பம், முரண்பாடு. ஏழாண்டுகால கமிஷன் வரலாற்றில் ராஜீவ் குடும்பத்திலிருந்து யாருமே வந்ததில்லை. பிரியங்காதான் வந்தார். குறிப்பிட்ட அந்த நேரத்தில் மட்டுமே இருந்தார். ஆக நடந்தது என்ன என்பது அவர் களுக்கு நன்றாக தெரிந்திருக்கும். நேருக்கு நேராக பார்த்திருப் பார்கள். ஏதோ மர்ம முடிச்சு அவிழ்ந்ததை அறிந்திருப்பார். அந்த நிலைக்குப் பிறகு அடுத்தகட்ட நடவடிக்கை என்பதை, அந்த குடும்பம், கட்சி எடுத்திருக்க வேண்டும். ஏன் எடுக்கவில்லை. சந்தேகம் வருகிறதா இல்லையா?**

அப்படி ஒரு சந்தேகம் வருவது நியாயமே. இந்தச் செய்திகளைத் தெரிந்த எல்லோருக்குமே அப்படி ஒரு சந்தேகம்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



வராமல் இருக்க முடியாது. அதை நேரில் பார்த்ததன் காரணமாகத்தான் அந்த குறிப்பிட்ட நாள், ஒரு முக்கோணத்தைப் போல் சு.சுவாமி, நான், பிரியங்கா என அமர்ந்திருக்கிறோம். சுப்ரமணியசுவாமி திகைத்து வேர்வை கொட்டி நிற்கதியாய் நின்றவுடனே, 'நமக்கே இந்த அளவிற்கு ஒரு சந்தோஷம், வியப்பு வருகிறதே, ராஜீவ்காந்தியின் மகள் பிரியங்காவிற்கு எப்படி இருக்கும் என்று அவரை நான் பார்த்தேன். அவ்வளவு பெரிய கூட்டத்தில் அவரும் என்னை மட்டுமே பார்த்தார். அப்படி பார்க்கிறபோது அவருடைய முகமே ஒரு தீ ஜுவாலையைப்போல் மாறி, ஆத்திரமும் ஆவேசமும் கோபமும் கொந்தளிக்கிற வகையில், சிலப்பதிகாரத்தில் எப்படி கண்ணகி மன்னனைப் பார்த்துக் கொற்றவனும் நீயோ என்று கேட்கிறபோது இளங்கோ வடிகள் சொல்வாரே அப்படித்தான் இருந்தது பிரியங்காவின் முகம். அப்படிப்பட்ட ஒரு ஆவேசத்தோடு பிரியங்கா பார்த்தார். ஆகவே அவருக்கு அதிலிருந்த நியாயங்கள் புரிந்திருக்கிறது. இன்றைக்கும் புரிகிறது. அதில் மாற்றமே இல்லை. அதனுடைய விளைவாகத்தான் வேலூருக்கு வந்து சிறைச்சாலையில் உள்ள நளினியைப் பார்த்துவிட்டுச் சென்றார் என்று நான் திடமாக நம்புகிறேன். ஆனால் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்கின்ற சந்தேகம் இருக்கிறது. அதற்கு ஒரு உணர்வுப்பூர்வமான காரணம் இருப்பதாக நான் உணருகிறேன்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



எனக்கு கிடைத்திருக்கிற ஒரு பெரிய விஷயம் சோனியா ஒரு மிகப் பெரிய கட்சியினுடைய தலைவி. இந்தியா போன்ற பெரிய நாட்டை ஆட்சி செய்து ஆட்டிவைக்கும் ஒரு சக்தியாக இருக்கிறார். ஆனால் அவரும் ஒரு பெண்மணி. இரண்டு பிள்ளைகளைப் பெற்ற தாய். அவர் பிறந்தது இத்தாலி. ராஜீவ்காந்தியை காதல்மணம் முடித்து இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவிற்கு வந்த பிறகுதான் உலகமே விழிகளை விரித்துப் பார்க்கிற மிகப்பெரிய தலைவியாக, இந்தியாவின் பிரதமராக தன் மாமியார் இந்திராகாந்தி இருக்கிறார் என்பதை பக்கத்தில் இருந்து பார்த்து ரசித்தவர். அப்படி சர்வ வல்லமை படைத்த இந்திராவை, அவர் கண்களுக்கு முன்பாகவே சுட்டுக்கொன்றபோது, சோனியாகாந்தியின் மடியில்தான் அவரின் இறுதிமூச்சு அடங்கியது. அதை கண்முன்பாகவே பார்த்தவர். அதற்குப் பின்னால், தன்னுடைய காதல் கணவர் முதல்நாள் சிரித்து கைகாட்டிவிட்டுப் போனவர், அடுத்தநாள் சிதைந்து, அடையாளமே தெரியாது ஒரு பொட்டலத்தைப்போல் கட்டிக்கொண்டு வந்ததையும் கண்முன்னே பார்த்தவர். மிகப்பெரிய சக்தி படைத்த மாமியார், தன் கணவர், அதற்கு முன்னாலே தன்னுடைய கொழுந்தன் இப்படி வீட்டிலிருந்த சக்திமிக்கவர்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டதை பார்த்தவர்.



இப்போது மிச்சமிருக்கிற தன் பிள்ளைகளுக்கு தன்னைவிட பாதுகாப்பு இல்லை என்று அவர் நினைப்பதாலே எந்த தவறும் இல்லை. ஆக தன் கணவரின் கொலையாளிகள்மீது, தன் மாமியாரின் கொலையாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உந்துதல் இருந்தாலும், அதையும் மீறி அப்படி நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தன்னுடைய மகளுக்கோ மகனுக்கோ ஆபத்து வந்துவிடும் என்ற ஒரு அச்ச உணர்வு அந்தத் தாய்க்கு இருப்பது இயற்கையான ஒன்று என நான் கருதுகிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட கொலையை திட்டமிட்டு உலகமே கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு செய்கின்ற கொலையாளிகள் எவ்வளவு சக்தி மிக்கவர்களாக இருப்பார்கள். அவர்களை எதிர்த்து போரிட முடியாத, தெரிந்தாலும் நடவடிக்கை எடுக்க முடியாத கையறு நிலையில் சோனியா இருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன். ஆகவே அவர்மீது வருத்தப்படவில்லை. அனுதாபமே தோன்றுகிறது.

**இப்படியான தகவல்கள் தமிழ்நாட்டில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்களுக்கு தெரியுமா? அவர்கள் எதையும் தெரிந்துக் கொள்ளாதவர்களாக, 'புலிகள்' மீது மட்டுமே குற்றம் சாட்டுகிறார்கள். நீங்களோ இந்தக் கொலையில் புலிகளுக்கு தொடர்பில்லாத மாதிரிதான் பேசுகிறீர்கள்?**





மாதிரி என்று கூறவில்லை. ஒரு விஷயத்தை புரிந்துகொள்ள வேண்டும். புலிகள் பல கொலைகளை செய்திருக்கிறார்கள். அதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. எந்தக் கொலையைச் செய்தாலும் அதற்காக யார் என்ன சொன்னாலும், ஏன் கொலை செய்தோம் என்ற காரணத்தைக்கூறி பொறுப்பேற்கிற துணிவும் நேர்மையும் அவர்களிடத்தில் இருக்கிறது. ராஜீவ்காந்தி கொலை நடந்த அடுத்த நாளே லண்டனில் உள்ள எல்.டி.டி.ஈயின் தலைமை அலுவலகத்திலிருந்து தளபதி கிட்டு 'இந்த கொலையால் எங்கள் இயக்கத்திற்கு மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது' என்று ஒரு அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் ஒரு மாதத்திற்கு முன்பாக, கிட்டுவும் கவிஞர் காசி ஆனந்தனும், இன்றைக்கு அரசியல் பொறுப்பாளராக இருக்கின்ற பா. நடேசனும் மேலும் இரண்டுபேரும் ராஜீவ்காந்தியைச் சந்தித்து பேசிய பேச்சினுடைய விவரங்களையும், கடைசியாக 'விரைவிலேயே நான் மீண்டும் பிரதமராக வந்துவிடுவேன். என்னால் உங்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை எல்லாம் நானே துடைத்துவிடுகிறேன். உங்களுக்கு முழுமையாக நான் உதவுவேன். நீங்கள் இன்னும் கொஞ்சகாலம் பொறுங்கள். எல்லாம் நலமாக முடியும்' என்று கூறி வழியனுப்பினார் என்பதைக் குறிப்பிட்டு, அப்படிப்பட்ட நம்பிக்கையைத் தந்த தலைவர் இறந்துவிட்டார் என்று கிட்டு அறிக்கையில் கூறியிருந்தார்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



இரண்டாவது, ராஜீவ்காந்தியின் கொலையில் சந்தேகப்படுவது, சம்பந்தப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்ட சிவராஜனும் சுபாவும் பெங்களூருவில் இருந்தபோது போலீஸ் சுற்றி வளைக்கிறது. அவர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு செத்தார்கள். நான் நேரடியாகவே கேட்கிறேன். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இன்றைக்கு சேருகிறவர்கள் முதற்கொண்டு, முடியாத ஒரு நிலை வருகிறபோது சயனைட் குப்பியைக் கடித்து சாவதுதான் திட்டமாக வைத்திருக்கிறார்கள். துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு அல்ல. இவர்கள் அந்த நிலையில் இருந்து மாறியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொன்றாக பார்த்தீர்களானால் அந்த சிவராஜனும் சுபாவும் ஈழத்தமிழர்களாக இருக்கலாம். ஆனால் ஈழத்தமிழர்கள் எல்லோரும் எல்.டி.டி.ஈனர் அல்ல. அந்த உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு இது. எல்.டி.டி.ஈ என்கிற அமைப்பு ஒரு தெளிவான சில கட்டுப்பாடுகள், வழிமுறைகள், விதிமுறைகள் என வைத்திருக்கிறார்கள். அந்த விதிமுறை மரபுப்படி எதையெல்லாம் செய்வார்களோ, அதையெல்லாம் சிவராஜனும் சுபாவும் செய்யவில்லை. அதிலிருந்தே இவர்கள் வேறுபட்டவர்கள் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து புலிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த கொலையில் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், மீண்டும் மீண்டும் சர்வ வல்லமை படைத்த





அந்தஉச்ச சக்தி, எல்.டி.டி.ஈ னர்தான் என்கிற செய்தியை மக்கள் மத்தியில் அழுத்தமாக விதைத்துவிட்ட காரணத்தினால்தான், அது மாறுவதற்கு இத்தனையாண்டு காலம் ஆகிவிட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே விடுதலைப் புலிகளுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்று பொதுக்கூட்டங்களில் நான் பேசுகிற போது, விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றோம் என்று பகிரங்கமாக மார்தட்டிக்கொண்டு, உயிர்போனாலும் பரவாயில்லை என்று சொல்லுகிற தலைவர்கள் கூட நான் பேசிக்கொண்டிருக்கிறபோது என் பக்கத்தில் வர அச்சப்பட்டார்கள்.

**ஆமாம் நீங்கள்தான் தொடக்கத்தில் இருந்தே இந்த கருத்தை வலியுறுத்தி பேசி வருகிறீர்கள்?**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே நான்தான் இப்படி முதன்முதலாகப் பேசினேன். இதில் இன்னும் பல பின்னணி செய்திகள் இருப்பதை ஏன் நான் சொல்லுகிறேன் என்றால், இப்போது இன்னொரு செய்தியையும் இந்த ஊடகத்தின் வாயிலாக முதன்முதலாக பதிவுச் செய்கிறேன். அந்த கொலை நடப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்பாக, சுப்ரமணியசுவாமி எப்போதெல்லாம் சென்னைக்கு வந்தாலும் மறைந்த டெலோவின் தலைவர், சிறீ சபாரத்தினத்தினுடைய அண்ணன் ஸ்ரீகாந்தா



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



என்பவர் தொடர்ந்து சாமியை வந்து சந்திப்பார். அவர் சந்திக்காத நாளே கிடையாது. நாங்கள் வெளியூர் பயணம் செல்கிறபோது பல நாட்கள் அந்த ஸ்ரீகந்தாவும் எங்களோடு தங்கியிருக்கிறார். இந்த கொலை நடந்ததற்குப் பின்னாலே அவர் எங்கிருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது. இந்தக் கொலையில் ஈழத்தைச் சேர்ந்த மிலிடெண்ட், அதாவது பயிற்சி பெற்ற தமிழர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பார்களேயானால் அந்த ஸ்ரீகந்தாவால் ஏற்பாடு செய்யப்பட்டு சுப்ரமணியசுவாமிக்கு தரப்பட்டவர்களாகத் தான் இருக்க முடியும் என்ற தெளிவான சந்தேகம் எனக்கு எழுந்த காரணத்தால்தான் அப்போதே இந்த சந்தேகத்திற்கு நான் வந்தேன்.

**அதன்பிறகு அந்த ஸ்ரீகந்தா எங்கிருக்கிறார், என்ன ஆனார் என்று தெரியவில்லை?**

ஆம்: இதுவரை தெரியவில்லை. என் கவனத்திற்கு தெரிந்து தெரியவில்லை. இந்தியாவில் சென்னையில்தான் இருந்தார். பகிரங்கமாக இருந்தார். ஒவ்வொரு முறையும் வந்துச் சென்றார். திருச்சியில் உள்ள எனது வீட்டிற்கு அவர் மனைவியோடு வந்து போனார். அந்த கொலைக்குப் பின்னால் இந்த பதினேழு ஆண்டுகாலம் நான் அவரை சந்திக்கவே இல்லை. எங்கே? அந்த சுப்ரமணியசுவாமிதான் விளக்க வேண்டும். அதுமட்டுமல்ல. உங்களுக்கு இன்னொரு செய்தியையும் சொல்லுகிறேன். ஒரு



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



முறை சுப்ரமணியசுவாமிக்கும், அ.தி.மு.க.வுக்கும் பிரச்சனை வந்தபோது, கூட்டங்களில் கலவரம் நடந்தபோது, சைதாப் பேட்டையில் மாரியம்மன் கோயில் அருகே ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கு வந்த சாமி தலைக்கு எல்மெட் அணிந்துக்கொண்டு வந்தார். சந்திரலேகா அவருக்கு பாதுகாப்பாக தலைக்கு மேலே ஒரு சேரை தூக்கிப்பிடித்தபடி நிற்பார். அந்த படத்தில் மூன்று பேர் தெளிவாக இருப்பார்கள். ஒன்று சாமி, இரண்டாவது சந்திரலேகா, மூன்றாவது ஒரு பெண்மணி. அந்தப் பெண்மணியை ஒரு வார பத்திரிகையில் படமாக போட்டு, இவரது பெயர் பிரியதர்ஷனி. சுப்ரமணியசுவாமிக்கு நெருக்கமாக காணப்படுகிறார் என்று சொல்லிவிட்டு, அந்த படத்தை நான் விசாரணை அதிகாரியிடம் கொடுத்து சொன்னேன். சுற்றியிருப் பவர்கள்கலவரம் நடக்கிறதென்று தற்காத்துக்கொள்கிறார்கள்.

ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கும் சந்திரலேகாவின் முகம்கூட வெளிறிப்போய் இருக்கிறது. பாருங்கள், அந்தப் பத்திரிகையில் இருக்கக்கூடிய அந்த சிறுவயதுப் பெண்மணி மிகச் சாதாரணமாக கொஞ்சம்கூட சலனம் இல்லாமல், சிரித்தபடியே கூட்டத்தை பார்த்தபடி நிற்கிறாரே, அப்படி அவரால் இருக்க முடியும் என்றால் இவர் ஒரு போராளியாகத்தான் இருக்க முடியுயம் என்று நான் சந்தேகப்படுகிறேன் என்று கூறி அந்த பத்திரிகையையும் பல்முனைநோக்கு புலன்விசாரணை



கமிஷனிடம் தந்தேன். ஒரு பொதுக்கூட்டத்திலும் பேசினேன். அதுநாள் வரையில் சாதாரணமாக அடையாறு பகுதியில் காரிலே சுற்றிக்கொண்டிருந்த அந்த பிரியதர்ஷனி அடுத்த நாள் எங்கு போனார் என்றே தெரியவில்லை.. இப்படி பல சந்தேகங்கள் மர்மங்கள் இருக்கிறது.

**அந்த பிரியதர்ஷனி யார் என்ன என்கிற தகவல் உங்களுக்கு தெரியுமா?**

சுப்ரமணியசுவாமிதானே கூறவேண்டும். அவரோடுதானே அந்த பெண்மணி வந்தார். போனார். இப்போது இல்லை என்றால் அவர் யார்? எங்கிருந்து எப்படி வந்தார். என்ன தொடர்பு? எதற்குப் பழகினார்? எல்லாமும் சாமிதானே சொல்ல வேண்டும். நான் ஆதங்கத்தோடு சொல்லுகிற ஒரு விஷயம் என்னவென்றால், தர்மபுரி பக்கத்தில் ஒரு காவல் நிலையத்தில் இருந்த கட்டைத் துப்பாக்கி காணாமல் போனது. பிறகு கிடைத்துவிட்டது. ஆனாலும் அதைச் செய்தது யார் என்று சந்தேகப்பட்ட பதினெட்டு காவலர்களைக்கூட நார்கோ அனலைஸ் சோதனைக்கு உட்படுத்தி விசாரித்தார்கள். கேவலம் உயிரும், உணர்ச்சியுமற்ற ஒரு கட்டைத் துப்பாக்கி, அது கண்டுபிடிக்கப்பட்டும்கூட எப்படி காணாமல் போனது என்பதை அறிய இவ்வளவு முயற்சி எடுக்கின்ற இந்திய புலனாய்வுத்துறை,





இந்தியாவின் மதிப்பு மிக்க தலைவரின் கோரக் கொலையை உலகமே அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டு உண்மைகள் எப்போது வெளிவரும் என்று ஏங்கிக்கொண்டிருக்கிற இந்த கொலையில் உண்மையைக் கண்டறிய சுப்ரமணியசுவாமிக்கு ஏன் அந்த நார்கோ அனலைஸ் சோதனையை செய்யவில்லை என்பதுதான் என் கேள்வி.

**இல்லை, ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட வேறு யாருக்காவது இப்படி நார்கோ அனலைஸ் சோதனையைச் செய்திருக்கிறார்களா. உட்படுத்தியிருக்கிறார்களா?**

தெரியவில்லை. முழுமையாகச் சொல்ல முடியவில்லை. மற்றவர்களுக்கு அப்படி செய்தார்களா இல்லையா என்று அந்த அதிகாரிகள்தான் சொல்ல வேண்டும். என்னுடைய கேள்வி என்பது, இப்படி இவ்வளவு பெரிய சந்தேக வட்டத்தில் இருக்கக்கூடிய சுப்ரமணியசுவாமிக்கு ஏன் அதைச் செய்யவில்லை என்பதுதான். மாபெரும் தலைவரின் கோரக்கொலையின் உண்மையை இப்படி கண்டறிய முயற்சி செய்யவில்லை என்பதுதான் என்னுடைய வன்மையான குற்றச்சாட்டு.

**இப்போது பேசிக்கொண்டு வந்ததில் இன்னொரு புது விஷயத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சியின் ராமநாதபுர தொகுதி எம்.எல்.ஏ ஹசன் அலி பற்றி கடுமையாக விமர்சிக்கிறீர்கள். என்ன**




FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



**காரணம். அவர் காங்கிரஸ் கட்சியில் இருக்க வேண்டியவரில்லை. இலங்கை அதிபர் ராஜபக்சேவுடன் இருக்க வேண்டியவர் என்கிறீர்கள். எதற்காக அப்படி...?**

சொன்னால் வெட்கமடா, சொல்லாவிட்டால் துக்கமடா என்றுதான் கூறவேண்டியிருக்கு. காங்கிரஸ் கட்சிக்கு சம்பந்தமே இல்லாத பல பேர் எம்.எல்.ஏக்களாக, எம்.பிகளாக வர முடிகிறது என்பதற்கு வேதனையான கசப்பான உண்மை. அதை சொல்லுவதற்கு எனக்கே கூச்சமாக இருக்கிறது. ஆனால் இப்படி வந்துவிட்டதற்குப் பின்னாலே இந்த உண்மையை கண்டறிந்து, அதை வெளியில் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. 2006ம் ஆண்டுதான் அவர் சட்டமன்ற உறுப்பினராக வந்தார். ராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார். ராமநாதபுரத்தில் அவர் வசிக்கவில்லை. இருந்தது எல்லாம் சென்னைதான். ப்ளாட்பாரத்தில் சுற்றிக்கொண்டு இருந்தார். அந்த 2006ம் ஆண்டு தேர்தலுக்கு ஒரு ஆறு மாதம் முன்பு ஒரு நாள் என்னுடைய நண்பர் நடராஜனின் வீட்டு மாடியில் நானும் அவரும் பேசிக்கொண்டிருந்த நிலையில், அவருடைய உதவியாளர் வந்து 'ஒருவர் வந்திருக்கிறார். துபாயில் இருந்து வரும் ஒரு சின்ன பத்திரிகைக்கு ப்ரீலேன்ஸ் ரிப்போர்ட்டராம். உங்களிடம் பேட்டி எடுக்க வேண்டும் என்கிறார்' என்று சொன்னார். அதற்கு 'போவ் போகச்சொல்லுய்யா. துபாய் பத்திரிக்கையில் வந்து என்ன





ஆகப்போகிறது' என்று கூறினார். பிறகு நீண்ட நேரம் கழித்து நான் கீழே எட்டிப் பார்த்த போது அந்த ஒருவர் மட்டும் உட்கார்ந்தபடியே இருந்தார். உதவியாளரிடம் யார் என்று கேட்டேன். பேட்டி எடுக்க வந்த ரிப்போர்ட்டர் என்றேனே அவர்தான். சொல்லிவிட்ட பிறகும் போகமாட்டேன் என்கிறார் என்று சொன்னார். சரி வரச்சொல் எனக்கூறி 'என்ன ஒரு ஐந்து நிமிடம் பேசுங்களேன்' என நண்பர் நடராஜனிடம் கூறினேன்.

அப்படி வந்தவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது உங்களுக்கு அரசியலில் ஈடுபாடு உண்டா என்று கேட்டேன். எனக்கு அதெல்லாம் கிடையாது சார். துபாயில் நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக அவ்வப்போது இப்படிச் செய்வேன். அவ்வளவுதான். சின்ன சின்ன தமிழ் பத்திரிகைகளுக்கு நான் செய்தியை அனுப்புவேன் என்றார். பிறகு ஒரு பதினைந்து நாளுக்குப் பின்னாலே ஒரு பத்திரிகையை கொண்டு வந்து கொடுத்தார். சிறியதாக செய்தி போடப்பட்டிருந்தது. அதையும் பார்த்தோம். பிறகு சட்டமன்ற தேர்தல் முடிந்து இரண்டு மாதம் ஓடியது. ஒரு நாள் நண்பர் நடராஜனை சந்திக்க அவரது வீட்டிற்குப் போனேன். 'என்னய்யா உங்க காங்கிரஸ் கட்சி இவ்வளவு கேவலமாக இருக்கிறதே என்று சொன்னார். ஏன் இப்படி சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். நான் இப்போதுதான் நெல்லை சென்று வந்தேன். மதுரையைத் தாண்டி ரயிலில்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



சென்றுகொண்டிருந்த போது ஒருத்தர் வந்து வணக்கம்னு சொன்னார். நானும் வணக்கம் என்றேன். அய்யா நன்றாக இருக்கின்றீர்களா என்றார். நன்றாக இருக்கின்றேன் எனச் சொன்னேன். பிறகு என்னைத் தெரிகிறதா என்றார். பார்த்த ஞாபகம். ஆனால் தெரியவில்லை என்றேன். உடனே நான் ராமநாதபுரம் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ என்றார். அப்படியா ரொம்ப சந்தோஷம் என்று கைகொடுத்தேன். ஐயா தப்பா நினைக்கக்கூடாது. என்னை தெரியலங்கிறீர்களே. கொஞ்ச நாளைக்கு முன்னால், துபாயில் இருக்கும் ஒரு பத்திரிகைக்கு பேட்டி கேட்டு வந்தேன் இல்லையா, அது நான்தான் என்று சொன்னார். நான் ஆச்சர்யப்பட்டுப்போனேன். ஆறு மாதத்திற்கு முன்னால் அவர் வந்தபோது நீதான் 'அரசியல் ஆர்வம் உண்டா' என்று கேட்டாய். எனக்கும் எந்த கட்சிக்கும் சம்பந்தம் இல்லை என்றார். இப்படி எந்த கட்சியும் தொடர்பே இல்லைன்னு சொல்லி சென்னையில் சுத்திகிட்டிருந்த ஒரு ஆளுக்கு, ஆறாவது மாதம் நடக்குற தேர்தலில், அதுவும் ராமநாதபுரம் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ.வா எப்படி சீட்டு வாங்கினார்? எப்படி ஜெயிச்சார்? ஒன்னும் புரியலையே. காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு எந்த கட்சியிலும் இப்படி நடக்காதே என்று சொன்னார்.

எனக்கு அசன்அலி மீது கோபமோ பொறாமையே, ஆத்திரமோ என்று எதுவும் கிடையாது. எந்த இடத்தில் நான்



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



மாறுபடுகிறேன் என்றால், அவர் எம்.எல்.ஏ வாக வந்த பிறகு, அவருடைய நடவடிக்கைகளிலிருந்துதான் சந்தேகமே தோன்றுகிறது. அதுதான் முக்கியம். இலங்கையில் அதிபராக இருக்கக்கூடிய ராஜபக்சே, அங்கே உள்ள தமிழர்களை பூண்டோடு அழிப்பதாக பகிரங்கமாக சொல்லிக்கொண்டிருக்கும் ஒரு நபர். அப்படிப்பட்ட ராஜபக்சேவின் நண்பராகச் சென்று அங்கே தங்குகிறார். இருவரும் அடிக்கடி தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் தமிழகத்தின் முதலமைச்சர் கருணாநிதிக்கு அசன் அலி ஒரு கடிதம் எழுதுகிறார். இலங்கைக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்புங்கள்.என்னையும் சேர்த்து அனுப்புங்கள். இந்தப் பிரச்சனை எல்லாவற்றையும் நான் தீர்த்துவிடுகிறேன். நீங்கள் அனுப்பி வைக்கின்ற உதவிப் பொருட்களையும் நான் அங்கே பக்கத்திலிருந்து அவர்களுக்கு சரியாகப் போய்ச்சேர உதவி செய்கிறேன் என்றெல்லாம் கடிதம் எழுதுகிறார். ஆக அவருக்கு அப்படி ஒரு உரிமையைத் தந்தது யார்? இந்தியாவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியே, இலங்கைக்கு போகமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற போது, இந்த சாதாரண மனிதர் நினைத்தால் உடனே, 'ராஜபக்சே இங்கே வரவேண்டுமா? அல்லது அங்கே சந்திக்க வேண்டுமா' என்ன செய்ய வேண்டும். அதை நான் முடித்துத் தருகிறேன் என்கிறார். இந்த செல்வாக்கு எப்படி வந்தது.



இதனுடைய பின்னணி என்ன? ஆராய்ச்சி செய்ய வேண்டிய ஒன்று.

மும்பையில் எங்கோ வெளியில் இருந்து வந்த பயங்கரவாதிகளால் ஏற்பட்ட ஆபத்து பற்றி பேசுகிறோம். வெளியிலிருந்து வந்த ஆபத்து என்பது விரோதிகளால் வந்த ஆபத்து. அசன் அலியைப் போன்ற இங்கேயே இருக்கின்ற துரோகிகள், தமிழகத்திற்கு இந்தியாவிற்கு எதிரானவர்களுடன் தொடர்பு வைத்திருக்கின்ற ராஜபக்சேவுடன் நட்பு உறவாடுவதைப் பற்றி சரியாக ஆராயவில்லை என்றால் மிகப்பெரிய ஆபத்து இந்தியாவிற்கு வந்துவிடும். விரோதிகளைவிட இப்படிப்பட்ட துரோகிகள் ஆபத்தானவர்கள் என்கிற வகையில்தான் நான் அவரை விமர்சிக்கின்றேன். வேறொன்றுமில்லை.

**சமீபத்தில் இலங்கை அதிபர் ராஜபக்சே, அரை மணிநேரம் அசன்அலி எம்.எல்.ஏ-வுடன் தொலைபேசியில் பேசினார். அதற்கு அடுத்த நாளே சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் தனியாக ஒரு ஆதரவு எம்.எல்.ஏ கூட்டத்தைக் கூட்டுகிறார். முதல்வர் தலைமையில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்துவதற்கு ஒத்துழைப்பு இல்லை என்ற நிலைப்பாட்டில் பேசியதாக செய்தி வந்தது. பிறகு பார்த்தால் முதல்வர் அறிவித்த மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லை என்ற அறிவிப்பு வருகிறது. காங்கிரஸ்**


FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



**கட்சியின் வேலூர் சட்டமன்ற உறுப்பினரான ஞானசேகரனும் ஈழ ஆதரவாளர்களை கடுமையாக எதிர்க்கின்றார். அதுபற்றியெல்லாம் என்ன நினைக்கிறீர்கள்?**

அசன்அலியை நான் விமர்சிப்பதற்கு அதுவெல்லாம் காரணம். காங்கிரஸினுடைய சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சுதர்சனம். தமிழக காங்கிரஸ் கட்சிக்குத் தலைவர் தங்கபாலு. அந்த இருவருக்கும்தான் எம்.எல்.ஏக்களை கூட்டுகின்ற உரிமை இருக்க முடியும். சம்பந்தமே இல்லாமல் இந்த அசன் அலி, ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து கூட்டம் போடுகிறார் என்றால் எந்த உரிமையில் போடுகிறார். ஏன் போட்டார். விசாரிக்க வேண்டிய பொறுப்பு கட்சித் தலைமைக்கு இருக்கிறதா இல்லையா? ராஜபக்சே அவருடன் அரை மணிநேரம் தொலை பேசியில் பேசிய அடுத்த நாள் இவர் தனியாக ஒரு கூட்டம் போடுகிறார் என்றால்...? நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அசன் அலி காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் என்றும், தமிழக தலைவர் தங்கபாலு என்றும், அகில இந்திய தலைவர் சோனியாகாந்தி என்றும் நினைத்துக்கொண்டிருக்கிறோம். தங்கபாலு சோனியாகாந்தியைக் கடந்து அவருக்கு முதல் தலைவர் ராஜபக்சேதான் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. இப்படிப்பட்ட ஆபத்தான, மிகவும் மோசமான ஒரு சூழ்நிலை. அசன் அலியின் செயல்பாட்டில்



இருக்கின்றபோது, அதைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல, அரசுக்கும் இருக்கிறது என்று கூறுகிறேன்.

**ராஜபக்சே அசன் அலியின் நண்பர். ஒரு நண்பரோடு பேசுவது எப்படி குற்றம் என்கிறீர்கள்?**

அது சரியா தவறா என்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்வது சரியல்ல. இன்றைக்கு இலங்கையில் இருக்கின்ற ராஜபக்சேவிற்கு இந்தியாவின் பகை நாடான பாகிஸ்தானுடனும் தொடர்பிருக்கிறது. சீனாவுடனும் தொடர்பிருக்கிறது.. ஆக இந்தியாவிற்கு பக்கத்திலே வலிமையான சீன அதிபருடனும், பாகிஸ்தான் அதிபருடனும் நண்பராக இருக்கக்கூடிய ராஜபக்சேவிடம் அசன் அலிக்கு தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறது என்று சொன்னால், அது இந்தியாவைக் காப்பாற்றவா? இந்தியாவின் நலனுக்கா? அல்லது இந்தியாவை படுகுழியில் தள்ளவா? சந்தர்ப்பம் கிடைத்தால் இந்தியாவை காட்டிக் கொடுக்கவும் இப்படிப்பட்டவர்கள் தயங்கமாட்டார்கள். ஒரு காலத்தில் எப்படி எட்டப்பன் இருந்தானோ, அந்த எட்டப்பனுடைய பேர் வேண்டுமானால் மாறியிருக்கலாம். எட்டப்பனுடைய மறுபிறவியாகத்தான் இந்த அசன் அலி இருக்கிறார் என்று நான் குற்றம் சுமத்துகிறேன். இவர்மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனுடைய விளைவுகளை மத்திய அரசு விரைவிலேயே சந்திக்கும்.





**அசன்அலி மீது கூறும் குற்றச்சாட்டைப் போன்று மற்றொரு குற்றச்சாட்டு. தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக செயல்படும் இயக்கத்தினரை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காகவே ராஜபக்சேவின் அரசு சுமார் இருநூறு கோடி செலவு செய்திருக்கிறது. அதற்கு இங்குள்ளவர்கள் சிலரே உடந்தையாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொடர்பில் உள்ள ஒருவர் அசன்அலி என்றும், அவரது தொடர்பு டெல்லியில் உள்ள சந்திராசாமி மடம்வரை நீள்கிறது என்றும் கூறுகிறீர்கள். சம்பந்தமில்லாத குற்றச்சாட்டாக உள்ளதே?**

இந்தியாவில் இலங்கைக்கு உண்டான உயர் கமிஷன் அலுவலகம் டெல்லியில் இருக்கிறது. சென்னையில் உள்ள இலங்கையின் துணைத் தூதரக அதிகாரி அம்சா, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் தலைவர்களை யாராவது பார்க்காத அரசியல் தலைவர்கள் இருக்கிறார்களா? தமிழ்நாட்டில் உள்ள பல பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள் போட்டோகிராபர்கள் உட்பட யாராவது இரண்டு பேரை தினசரி அழைத்துச் சென்று ஏதாவது ஒரு நட்சத்திர ஓட்டலில் அவர்களுக்கு விருந்துக் கொடுத்து உற்சாகப்படுத்துவது என்ற வேலையாகவே இருக்கின்றார். எந்த நாட்டினுடைய துணைத் தூதரக அதிகாரிகள் வேறு யாராவது இப்படிச் செய்கிறார்களா? அம்சா மட்டும் அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?இங்கே ஊடகங்கள் வாயிலாக, அங்கே இலங்கையில் இருக்கக்கூடிய



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

புலிகளுக்கு எதிரான ஒரு கருத்தை தமிழ்நாட்டில் விதைத்து, அதை அறுவடை செய்ய வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கம். இது தமிழ்நாட்டில் உள்ள ஊடகங்களைப் பார்த்துக் கொள்வதற்குத்தான் அம்சா. தேசிய அளவிலே இருக்கக்கூடிய தலைவர்களை தன்வசப்படுத்தற்காக, அவர்கள் பயன்படுத்து வதுதான் சந்திராசாமி. அந்த சந்திராசாமி...

**இல்லை. அதற்கென்ன ஆதாரம். மேம்போக்கான குற்றச்சாட்டை வைப்பது சரியில்லையே?**

பல பேரும் இப்படி கேட்கிறார்கள். நீங்கள் இப்படிக் கேட் பீர்கள் என்றுதான் இந்த ஆதாரத்தை கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்தப்படம் ஒரு மேடையிலே சந்திராசாமி அமர்ந்திருக்கிறார். முன்னாலே ஒருவர் காலைத்தொட்டு கும்பிட்டுக்கொண்டிருக்கிறார். அதற்குப் பக்கத்திலே உடலை வளைத்து ஒருவர் கும்பிட்டுக்கொண்டிருக்கிறார். இந்த இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். அந்த இருவரில் ஒருவர் ராஜபக்சேவின் அக்காள் மகன். பியாந்த கரிய பெரும என்பது அவர் பெயர். அவர் அங்கே இருக்கிற ஒரு குழுவின் சேர்மென்னாக பணியாற்றுகிறார். இன்னொருவர் டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் உயர் அதிகாரி. நான் உங்களிடம் சில கேள்விகளுக்கு பதிலையும், கேள்வியையும் வைக்க விரும்புகிறேன். பியாந்த கரிய பெரும என்கிற ராஜபக்சேவின் அக்காள் மகனும், அந்த உயர் அதிகாரியும் வகுப்புத் தோழர்கள். அந்த பியாந்த கரிய பெருமா என்பவர் மாதத்திற்கு ஒருமுறை இரண்டுமுறை டெல்லி வந்து செல்கிறார். அப்படி வரும்போதெல்லாம் சந்திராசாமியைச் சந்திக்கிறார். அப்படி சந்திக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் எதற்காக வருகிறார். அவருடைய பணி இங்கு என்ன? முக்கியமான கேள்வி இது. ஆன்மீக ஈடுபாட்டால்தான் வருகிறார் என்றால் சந்திராசாமி ஒரு இந்து. அவரை இந்து சாமியார் என்று சொல்வதே இந்து மதத்திற்கு அவமானம். சாமியார் வேடத்தில் இருக்கிற கபட வேடதாரி. உலகம் முழுதும் தெரிந்த ஒரு மோசமான ஆயுத கடத்தல் மன்னன் என்று இன்றளவும் சொல்லப்படுகிறவர். அந்த மனிதனை ராஜபக்சேவின் அக்காள் மகன் அடிக்கடி சந்திப்பது ஏன் என்று பார்க்கிறபோது, அங்கு அவருக்கு அருகிலேயே இருக்கிற சில பேர்கள் மூலமாக கசிந்து வந்திருக்கிற செய்தி!



தமிழ்நாட்டில் எப்படி ராஜீவ்காந்தியின் கொலைக்கு மிக சாமார்த்தியமாக திட்டம் வகுத்துக் காட்டினாரோ, அதேபோன்று தமிழகத்தில் புலிகளுக்கு எதிராக ஒரு கருத்தை உருவாக்கி காட்டுகிறேன் பார் என்று சொல்வதற்காக, அந்த அரசாங்கம் கொடுத்த வெகுமதி பல கோடிகள். அந்த கோடிகளைப் பெற்றுக் கொண்டுதான் அவர் தன்னுடைய சகா சுப்ரமணியசுவாமியோடு சேர்ந்து தமிழ்நாட்டிலுள்ள பல அரசியல்வாதிகளுக்கு பணம் பட்டுவாடா செய்து முறையான உண்மையேதும் இல்லாமல், இப்போது எப்படி ராஜீவ்காந்தி படு கொலையைக் கொச்சைப் படுத்திப் பேசுகிறார்கள் என்று சொல்லி, என்ன கொச்சைப் படுத்துகிறார்கள் எனச் சொல்லாமல், மிகச் சாமர்த்தியமாக புலிகளுக்கு எதிரான ஒரு கருத்தை உருவாக்குவதற்கு ராஜீவ் காந்தியின் கொலையைப் பயன்படுத்துகிறார்கள். இதில் காங்கிரஸ் கட்சியில் அசன்அலியை குறை சொல்வதற்கு என்ன காரணம் என்றால் கரும்புத் தின்ன கூலியா என்பார்கள். அதைப்போல கட்சியின் விசுவாசி என்கிற முத்திரையும் இவர்களுக்கு கிடைக்கிறது. ராஜீவ்காந்தியின் குடும்பத்திற்கு நெருக்கமானவர்கள் என்ற தோற்றத்தையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். அதற்கு வருமானமும் கிடைக்கிறது. அதற்காக நடக்கிற ஏற்பாடு இலங்கையில் இருக்கிறவர்கள், இந்தியாவில் இருக்கிறவர்களை பயன்படுத்துவதற்கு நம்பிக்கைக்கு உரிய தலைமை சீடர்தான் சந்திராசாமி. அதனால்தான் இந்தப் படத்தைக் கொண்டுவந்தேன்.

**ஏன் இதை ஒரு சாதாரணச் சந்திப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது? பலரும் ஆன்மீகவாதியைப் பார்ப்பது வழக்கம்தானே?**

அதைத்தான் நானும் கேட்கிறேன். எதற்காக இந்த சந்திப்பு? அவர் புத்த மதத்தில் இருக்கிறார். ஒரு முறை சந்தித்தால் பரவாயில்லை. மாதத்திற்கு மூன்றுமுறை சந்தித்தால்...இன்ன காரணம் என்று வேண்டுமல்லவா? அதுவும் ஏற்கனவே ராஜீவ் கொலையில் சந்தேகத்திற்குரிய ஒரு குற்றவாளியை சந்திப்பதின் நோக்கம் என்ன?

**சந்திராசாமிதான் குற்றவாளி என்பதை எதைவைத்து கூறுகிறீர் கள்? இது மேம்போக்கான குற்றச்சாட்டாகதானே இருக்கிறது?**

இது சரியான கேள்வி. பத்து மாதத்திற்கு முன்பாக டெல்லியின் உயர்நீதிமன்றத்தில் சந்திராசாமி ஒரு வழக்கை தொடுத்தார். அந்த



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

மனுவின் சாராம்சம் என்னவென்றால் 'நான் அவசரமாக சில நண்பர்களைச் சந்திக்க வெளிநாடு செல்கிறேன். என்னுடைய பாஸ்போர்ட்டை இந்திய அரசு பறித்து வைத்திருக்கிறது அந்த கடவுச் சீட்டை எனக்கு தர கோர்ட் உத்திரவிட வேண்டும்' என்று கோரியிருந்தார். இந்த மனு அடிப்படையில் அரசாங்கத்திடம் நீதிமன்றம் பதில் கேட்கிறது. அப்போது இந்திய புலனாய்வின் தலைவர், நேரடியாக உயர்நீதிமன்ற நீதிபதிக்கு ஒரு கடிதத்தை எழுதுகிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பது 'சந்திராசாமி மீது பத்துக்கும் மேற்பட்ட அன்னிய செலாவணி மோசடி வழக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல, மிக மோசமான மர்மக்கொலையாகிய ராஜீவ்காந்தியின் படுகொலையில் விசாரிக்கப்படவேண்டிய முக்கிய சாட்சியம் இவர். எனவே அவருக்கு பாஸ்போர்ட்டை தரக்கூடாது' என்று எழுதியிருக்கிறார். நான் சொன்னால் நம்பகத்தன்மை இருக்காது. ஆனால் இந்திய புலனாய்வு துறையின் தலைவரே உச்ச நீதிமன்றத்திற்கு கொடுத்த பதில் கடிதத்தில் 'மர்மக்கொலையில் விசாரிக்கப்பட வேண்டிய முக்கிய சாட்சி என்று சொல்லியதற்குப் பின்னால், இதுவரை அந்த சந்திராசாமியை எங்கே விசாரித்தார்கள். எப்படி விசாரித்தார்கள்? யாருக்குத் தெரியும்? அந்த சந்திராசாமியை சிங்களப் பேரின்வாதத்தின் தலைவரான ராஜபக்சேவின் அக்காள் மகன் சந்திக்கிறார் என்றால் இரண்டும் இரண்டும் நான்காகத்தான் இருக்க முடியும். இரண்டு அதிகாரிகளுக்கும் இடையில் ஒரு இணைப்பு இருக்கிறது. அந்த இணைப்பை கண்டுபிடித்து உலகிற்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற கடமையும் பொறுப்பும் மத்திய அரசுக்கு இருக்கிறது. அதைத்தான் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன்.

**இல்லை. 1991-ல் ராஜீவ் படுகொலை நடக்கிறது. அப்போது இலங்கையில் ராஜபக்சே அதிகாரத்தில் இல்லை இப்போதுதான் அவர் அங்கே அதிபராக இருக்கின்றார். அவரது அக்காள் மகன் வருகிறார். இதில் எப்படி தொடர்பு இருக்கிறது என்கிறீர்கள்?**

மன்னிக்க வேண்டும். ராஜபக்சேவின் குடும்ப அரசியல் உறவு என்பது ஒரு நீண்டகால பாரம்பரியத்தைக்கொண்டது. அவருடைய தந்தை பாட்டனார் எல்லோரும் அரசியலில் இருந்தவர்கள்தான். சந்திரிகாவினுடைய தாயார் பிரதமராக வருவதற்கு முன்னால், அவருக்கு வழிவிட்டதே ராஜபக்சேவின் தந்தைதான். இந்தியாவில் நேரு குடும்பம் எப்படியோ, அப்படி இலங்கையில் ராஜபக்சேவின் குடும்பம். நீண்டகாலம் அரசியலில் இருக்கிறது. அதிகாரத்தில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. ஆனால் சிங்கள பேரினவாதத்தில் தீவிர ஈடுபாடு உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் ராஜபக்சே. குடும்பத்தில் உள்ள தம்பிகள் இரண்டுபேர், அக்காள், அக்காள் மகன், மாமன் என்று எல்லோருமே அரசியல் அதிகாரம் என ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பவர்கள்தான். முக்கிமான ஒரு விஷயத்தை தூது அனுப்புவதென்றாலும் ராஜபக்சே அவரது குடும்ப உறுப்பினரைத்தானே அனுப்புகிறார். ஆக இப்போது ஒரு மிக மோசமான அதிகார கும்பலின் தலைவனான சந்திராசாமியைச் சந்திக்க தொடர்ந்து தனது அக்காள் மகனை அனுப்பி வைக்கிறார். சந்தேகத்தை சொல்லவேண்டிய கடமை எனக்கு. சொல்லிவிட்டேன். அதை தீர்த்து வைக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இந்திய அரசுக்குத்தானே இருக்கிறது. அவர்கள்தானே இதை ஆராய வேண்டும்.

விசாரணையை திசைதிருப்புவதுதான் வேதனையாக உள்ளது. அதனால்தான் நான் முன்னாலேயே சொன்னேன். சரியான கோணத்தில் இந்த காங்கிரஸ்காரர்கள், ராஜீவ்காந்தியினுடைய கொலைக்கு உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்கிற முயற்சிக்கு உதவுவதற்குப் பதிலாக, உண்மையான குற்றவாளியை அரசாங்கமும், புலனாய்வுத் துறையினரும் நெருங்கினால்கூட அவர்கள் பிடிபடாமல் தப்பிக்கின்ற வகையில், கவனத்தை வேறுவகையில் திருப்புவதற்கு காங்கிரஸ்காரர்களே காரணமாக இருந்தால் ராஜீவ்காந்தியை கொலை செய்த கொலைகாரர்களை விட இவர்கள் கொடியவர்கள் என்று எதிர்கால சமுதாயம் இவர் களை பழிக்கும். காரி உமிழும் என்கிற வேதனையும், வருத்தமும் இருப்பதால்தான் நான் இப்படி போராடிக்கொண்டிருக்கிறேன்.

**நல்ல விஷயத்திற்காக நீங்கள் போராடுவதாக சொல்கிறீர்கள். ஆனால் டாக்டர். சுப்ரமணியசுவாமியோ 'திருச்சி வேலுச்சாமியும், எம். நடராஜனும் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள். அவர்களிடம் கூலி வாங்கிக்கொண்டு இப்படி பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள்' என்று கூறிவருகிறார். இதற்கு என்ன பதில்?**





FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

இதில் பாதி சரி. பாதி தவறு. அவர் எங்களை விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் ஆதரவாளர்களாக இருக்கின்றோம் என்று சொல்வது சரி. அதிலொன்றும் அவமானமில்லை. கௌரவம்தான். கேவலம் ஒரு பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்கூட எம்.எல்.ஏ பதவிக்கு, எம்பி பதவிக்கு அல்லது அமைச்சர் பதவிக்கு யார் காலிலாவது எவன் காலிலாவது வீழ்ந்துவிடுகிற சராசரி அரசியல்வாதிகள் மத்தியில், பணம் பதவி பற்றி கவலைப்படாமல், உயிரைப் பற்றியும் துச்சமென நினைத்து, மானத்திற்காகவும் மரியாதைக்காகவும் உயிரை விடுவதற்குத் தயாராக இருக்கின்ற ஒரு போராளிக் குழுவின் ஆதரவாளர்கள் என்று எங்களை சொல்வதில் கௌரவம்தான். ஆனால் சாமர்த்தியம் எங்கே இருக்கிறதென்றால், அதற்கு நாங்கள் கூலி வாங்குகிறோம் என்று சொல்கிறார்களே அதிலேதான். விடுதலைப் புலிகள் இயக்கமோ தடை செய்யப்பட்ட இயக்கம். அவர்கள் சாப்பிடுவதற்கே போராடிக்கொண்டு உயிரைக் கையில் பிடித்துப் போராடுகிறார்கள். இதில் எங்கே எங்களுக்கு கூலி கொடுப்பது. வழக்கமாக காலம் காலமாக கூலி வாங்கும் காரணத்தால், பழக்கத்தால் அவருக்கு அந்த புத்தி வருகிறது. மஞ்சள் காமாலைக்காரனுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சலாக தெரிகிறது என்பதைப் போல, எல்லா சதி செயலைச் செய்தவர்களும் கூலி வாங்கிகொண்டு செய்த காரணத்தால், நாங்களும் அப்படி வாங்கியிருப்போம் என்று சந்தேகப்படுகிறார்கள்.

**இந்த பேட்டியின் முக்கியமான மையம். இதை மையம் வைத்துதான் தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சி, புலிகளை ஆதரிக்கும் திருமாவளவன் மீது நடவடிக்கை எடு என்று நெருக்கடி கொடுத்து வருகிறது. குறிப்பாக, மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தலைவர் தங்கபாலு ஆகிளோர் இப்படி பேசிவருகிறார்கள்...?**

இளங்கோவன் பேசுவதை எல்லாம் நான் பெரியதாக எடுத்துக்கொள்வதில்லை. அவர் காலையில் ஒன்று பேசுவார். மாலையில் ஒன்று பேசுவார். காலையில் பேச ஒரு காரணம். மாலையில் பேச ஒரு காரணம் இருக்கிறது. அவருக்கு இருக்கக் கூடிய ஒரே பாதுகாப்பு, சம்பத்தினுடைய பிள்ளை, பெரியாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதுதான். நீண்டகாலம் ஓட்ட முடியாது. சிலரை சில காலம் ஏமாற்றலாம். பலரை பல காலம் ஏமாற்றலாம். எப்போதும் நிரந்தரமாக ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. சம்பத்தினுடைய பிள்ளையும் சரி, பெரியாரின் குடும்பம் சரி, நீ யார் உன்னுடைய யோக்கியதை என்ன என்று



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

கேட்கிற காலம் வந்துவிடும். நான் அவர்களைப் பார்த்துக் கேட்பது, இவர்கள் தி.மு.க. மீது சொல்லுகிறபோது இன்னொரு கேள்வி அதிலே இருக்கிறது என்பதை மறந்து விடுகிறார்கள். நான் வேதனையோடு சொல்வது ஊடகத் துறையினர் விழிப்புடன் இல்லை என்பதுதான்.

ஐ.கே. குஜ்ரால் என்பவர் இந்தியாவினுடைய பிரதமராக இருந்தார். அப்படி பிரதமராக இருக்கிறபோது, அவர் பதவியில் நீடிக்க காரணம் காங்கிரஸின் ஆதரவுதான். அந்த ஆட்சியில் தி.மு.க. வைச் சேர்ந்த முரசொலி மாறனும், டி.ஆர். பாலுவும் அமைச்சர்களாக இருந்தார்கள். அப்போது குஜ்ரால் அரசுக்கு ஆதரவை அளித்து வந்த காங்கிரஸ் திடீரென்று ஆதரவை திரும்பப் பெற்றுக்கொள்வதாக சொன்னது. கேட்டால் 'ராஜீவ்காந்தி படுகொலைக்கு காரணமாக இருந்த தி.மு.க.வைச் சேர்ந்த இரண்டு பேர் அமைச்சர்களாக இருப்பதை தாங்கிக்கொள்ள முடியாது. ராஜீவின் ஆன்மா எங்களை மன்னிக்காது. அவர்களை நீக்க வேண்டும் என்றார்கள். குஜ்ரால் அதற்கு சம்மதிக்கவில்லை. எனவே அந்த ஆட்சியை காங்கிரஸ் கவிழ்த்தது. ஒரு மத்திய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு தேர்தலை கொண்டுவருவதென்பது எவ்வளவு பெரிய விஷயம். மனச்சாட்சியே இல்லாமல் அதைச் செய்தது காங்கிரஸ் கட்சி. நான் கேட்கிறேன், இப்போது அதே காங்கிரஸ் கட்சி தலைமையில்தான் மத்திய ஆட்சி இருக்கிறது. இரண்டு அமைச்சர்கள் ஆட்சியில் இருப்பதையே 'ராஜீவின் ஆன்மா மன்னிக்காது' என்று சொன்னவர்கள், இன்று ஏழு தி.மு.க.காரர்களை தமது அமைச்சரவையில் வைத்திருக்கிறார்கள். இதை யாராவது ஒரு பத்திரிகைக்காரர் கேள்வி கேட்டிருந்தால் இவர்களின் முகத்திரை கிழிந்துபோயிருக்கும். என்ன காரணமோ யாரும் கேட்கவில்லை.

**அரசியலில் இதுவெல்லாம் சாதாரணம். பழையதை எல்லாம் மறந்துபோய் இருக்கலாம். போனது போனதாக இருக்கட்டும். இப்போது புதியதாக, மதவாத சக்திக்கு எதிராக நாங்கள் கூட்டணி சேர்ந்திருக்கிறோம் என்று கூறலாமில்லையா...?**

அதே காரணம் திருமாவளவனுக்கும் பொருந்தும் இல்லையா? மற்றவர்களுக்கும் பொருந்தும் இல்லையா? நேரத்திற்கு தகுந்தவாறு ஒன்றை மாற்றிக்கொள்வதா. நீங்கள் செய்கிற அரசியல்

தவறுகளுக்கு, வியாபாரத்திற்கு தேவைப்பட்டால் ராஜீவ்காந்தி என்ற முகமூடியை மாட்டிக்கொள்வீர்கள். அதுதானே வேதனையாக இருக்கிறது. உங்கள் அரசியல் சித்து விளையாட்டிற்கு வேறு ஏதாவது காரணத்தை பயன்படுத்தலாமே. நான் ஏற்கனவே கூறியதுபோல், ஒரு தனி மனிதனான நான் ராஜீவ் படுகொலையின் உண்மை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதற்காக உயிரைப் பணயம் வைத்து ஜெயின் கமிஷன் சென்றேன். பத்து நாள் பல்நோக்கு புலன்விசாரணைக் குழு முன் விசாரணைக்காக நின்றேன். தொடர்ந்து பிரச்சாரம் செய்து பலரின் முகத்திரையை கிழித்து வருகிறேன். இப்படி எல்லாமும் செய்தேன். இன்றும் செய்து வருகிறேன். இதில் ராஜீவ்காந்தி பற்றி பேச எனக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள முடியும். ஆனால் எந்தவித முயற்சியையும் செய்யாத தங்கபாலு, இளங்கோவன் போன்றவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. தகுதி இருக்கிறது. நாளைக்கேகூட வேறு ஒரு கட்சியில் வேறு முக்கிய பதவியைக் கொடுத்தால் 'ராஜீவைக்கொன்றது சோனியாதான்' என்று சுப்ரமணியசுவாமி சொல்வதைப்போல், இவர்களும் சொல்லமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. இவர்கள் இப்படி பேசுவது ஏதோ அந்த தலைவர் மீது இருக்கிற பற்று, பாசம் என்ற காரணத்தினால் அல்ல. பதவியைக் கொடுத்துள்ளார்களே. ஏதாவது பேசியாக வேண்டுமே என்பதற்காகத்தான் பேசுகிறார்கள். இந்த காங்கிரஸ் கட்சியில் அவ்வப்போது, பல நேரங்களில் துரோகிகளும் இருந்து வருகிறார்கள். அப்படித்தான் இப்போதும் துரோகிகள் இருக்கிறார்கள். என்ன ஒரு வெட்கக்கேடு என்றால் அவர்கள் இருக்கும் போதே நானும் அந்தக் கட்சியில் இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்வதுதான். என்ன செய்வது?

**பொதுவாகப் பார்த்தாலே காங்கிரஸ் கட்சிக்கு ஒரு குழப்பம். டெல்லி தலைமை தி.மு.க.வோடுதான் கூட்டணி என்கிறது. இவர்கள் திருமாவளவனை கைதுசெய், சீமானை கைதுசெய். இல்லையென்றால் கூட்டணியை விட்டு விலகுவோம் என்கிறார்கள். இப்படி கட்சியின் தலைமைக்கே கட்டுப்படாதவர்களாக இருப்பதை எப்படி பார்க்கிறீர்கள்?**

ஈழத் தமிழர் பிரச்சனை குறித்து பேச பிரதமரை சந்திக்கும் டெல்லி பயணத்திற்கு, திருமாவளவனை அழைத்து வந்தால் நாங்கள் கலந்துக்கொள்ள மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்தார் தங்கபாலு. திருமாவளவன் அனைத்துக் கட்சி குழுவோடு சென்றார். பிரதமரை சந்தித்த அந்த குழுவில் தங்கபாலுவும்தானே உட்கார்ந்திருந்தார். வெட்கம் கெட்டத்தனமாக அன்று சொன்னீர்களே. இன்று ஏன் கூடவே சென்று உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று யாராவது சொன்னோமா? அப்படி கேட்டிருந்தால் அர்த்தம் இருந்திருக்கும். அடுத்த முறை அவர் அப்படியெல்லாம் பேசியிருக்கமாட்டார். ஆனால் துரதிஷ்டவசமாக அவ்வப்போது பொய்யாக, போலித்தனமாக இப்படி பேசுவது பத்திரிகைகளில் பெரிய விளம்பரம்தானே ஒழிய இதுதான் அவர்களின் அரசியல் என்று தெரிவதில்லை. துரதிஷ்டமாக இதில் நிஜத்திற்கு கிடைக்கிற மரியாதையைவிட, நிழலுக்கு அதிக மரியாதை. தியாகத்திற்கு கிடைக்கிற மரியாதையைவிட தியாகியைப்போல் நடிப்பவர்களுக்கு அதிக மரியாதை கிடைக்கிறது. அப்படித்தான் இவர்கள். கட்சித் தலைமைக்கு இவர்கள் கட்டுப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அதுவும் ஒரு வகையில் காங்கிரஸ் கட்சிக்கு, தமிழ்நாட்டிலிருக்கிற நிலைமை என்னவென்றால் பெருந்தலைவர் காமராஜர் உயிரோடு இருக்கிற வரையில் அவரை மீறி எந்த ஒரு சக்தியும் இங்கே தலைதூக்க முடியவில்லை. டெல்லியில் இருப்பவர்கள் எதைச் செய்தாலும் அவரை மீறி எதுவும் செய்ய முடியாது. அவர் காலத்திற்கு பின்பாக டெல்லியில் தொடர்பு வைத்துக்கொள்வதற்கு, அல்லது டெல்லியில் தலைமைக்கு அருகிலே பவரில் இருக்கிற யாரையாவது திருப்திப்படுத்துகிறவன்தான் தமிழ்நாட்டில் தலைவராக வரமுடிகிறது. உண்மையிலேயே காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைகளை, லட்சியங்களை புரிந்துகொண்டு அந்த கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபடுகிறவர்கள் எல்லாம் தெருவிலே பஞ்சைகளாக பராரிகளாக அலைந்துகொண்டு இருக்கிறார்கள். இந்த கட்சிக்கு எந்த சம்பந்தமும் இல்லாதவன், கட்சிக்காக போராடதவன், வளர்ச்சிக்கென்று ஒரு சிறு துரும்பைகூட எடுத்து போடாத அசன்அலியைப் போன்றவர்கள் எல்லாம் எம்.எல்.ஏவாக, எம்.பியாக வந்துவிட முடிகிறது என்பதுதான் மானக்கேடான, வெட்கக்கேடான விஷயம். வேதனை என்பதைவிட வேறென்ன சொல்வது.





FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010

**மிக்க நன்றி. பல காலமும் சொல்லாமல் வைத்திருந்த செய்திகளை எல்லாம் இப்போது குமுதம் இணையதள நேயர்களுக்காக மனம் திறந்து பேட்டியளித்திருக்கிறீர்கள். வணக்கம்.**

நானும் நன்றி கூறிக்கொள்கிறேன். பதினேழு ஆண்டு காலம். என் மனதிற்குள் பூட்டிவைத்துக்கொண்டு புழுங்கியபடியே இருந்த நான் இன்று உலக தமிழர்களிடையே இந்த குமுதம் இணையதள ஊடகத்தின் மூலம் மனம் திறந்திருக்கிறேன். இதுவரை சொல்லாத பல செய்திகளை கூறியிருப்பதன் மூலம் இன்று என் மனப்பாரம் குறைந்திருக்கிறது. மிகப்பெரிய கொலைக்குற்றத்தில் உண்மைகள் எப்படி எல்லாம் முகமூடி அணிந்து உலவிக்கொண்டு இருக்கிறது என்பதை இன்று உங்கள் முன்பு அம்பலப்படுத்தியிருக்கிறேன் என்று சொல்வதைவிட இறக்கி வைத்திருக்கிறேன் என்றுதான் கூறவேண்டும். நன்றி வணக்கம்.



FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010



மூளை பலமும் உடல் பலமும் ஒரு சேர அமைந்த ஒரு சமுதாயம் உலக வரலாற்றில் இதுவரை தோன்றியதில்லை. அந்த புதிய வரலாற்றை உருவாக்கி வெற்றி கண்டிருப்பவர்கள் ஈழத்தமிழ் போராளிகள்.

ஆசிரியர் குறிப்பு.

1942-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி, தமிழகத்தின் இதயமான திருச்சிக்கு மிக அருகில் காவிரி படுகைப் பகுதியில் உள்ள நச்சலூர் என்னும் அழகிய கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். மனைவியின் பெயர் புஷ்பம். மகள் பெயர் சங்கீதா பி.எஸ்.சி. திருமணம் முடிந்துவிட்டது. மகன் பெயர் வே. ரஞ்சித். பி.ஈ- எம்.பி.ஏ.

பள்ளிப்படிப்பை கிராமத்திலும், உயர்நிலை கல்லூரிப் படிப்பை திருச்சியிலும் படித்தவர். கல்லூரியில் மாணவர் பேரவைத் தலைவராகவும், இன்டராக்ட் அமைப்பின் தலைவராகவும் செயல்பட்டவர். 1967-ல் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்ட பின் பெருந்தலைவர் காமராஜரால் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தவர். மாணவப் பருவத்திலேயே பட்டிமன்றம் பேச்சுப்போட்டிகளில் கலந்துகொண்டு பலமுறை பரிசுகளைப் பெற்றவர். திருச்சி மாவட்ட மாணவர் காங்கிரஸ் தலைவர் தொடங்கி பல்வேறு பொறுப்புகளில் கட்சிப்பணியாற்றியவர். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பொதுக்கூட்டங்களில் பேசியவர். பெருந்தலைவர் காமராஜரின் மரணத்திற்குப் பின் தமிழகத்திலேயே கைது செய்யப்பட்ட முதல் காமராஜரின் தொண்டன் இவர்தான். மனதில் பட்ட கருத்துகளை யாருக்காகவும் எதற்காகவும் சமரசம் செய்துகொள்ளாமல் வெளிப்படையாக பேசுகின்ற இயல்பு கொண்டவர்.

FREE E-BOOK (www.thamizham.net) TM1375 / 2010